بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 11

இதழ் 15

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 - ஷவ்வால் 20

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - ஷஹாதத் 09 ★ 09 ஏப்ரல் - 2026


## அல்லாஹ்வின் கட்டளை

وَیُطۡعِمُوۡنَ الطَّعَامَ عَلٰی حُبِّہٖ مِسۡکِیۡنًا وَّیَتِیۡمًا وَّاَسِیۡرًا ○ اِنَّمَا نُطۡعِمُکُمۡ لِوَجۡہِ اللّٰہِ لَا نُرِیۡدُ مِنۡکُمۡ جَزَآءً وَّلَا شُکُوۡرًا ○

அவர்கள் அ(ந்த இறைவன் மீது கொண்ட) அன்பின் காரணமாக ஏழை, அனாதை, கைதி ஆகியவர்களுக்கு உணவளிக்கின்றனர். அல்லாஹ்வின் விருப்பத்திற்காகவே நாங்கள் உங்களுக்கு உணவளிக்கின்றோம்; உங்களிடமிருந்து எந்தக் கூலியையோ, (நீங்கள்) நன்றி செலுத்துவதையோ நாங்கள் விரும்புவதில்லை.

(அத் தஹர்: 9 - 10)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## நபிமொழி

## இறை படைப்பினங்களுக்கு செய்கின்ற சேவை இறை வணக்கமாகும்

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்; 'ஆதமின் மகனே! நான் நோய்வாய்ப்பட்டிருந்தேன், ஆனால் நீ என்னை நலம் விசாரிக்க வரவில்லை என்று கியாமத் நாளில் அல்லாஹ் கூறுவான். அதற்கு, நீயோ அகிலங்களின் இறைவன் ஆவாய்; நீ எப்படி நோய்வாய்ப்பட முடியும்? நான் எப்படி உன்னை நலம் விசாரிக்க முடியும்?' என்று அவர் கேட்பார். அதற்கு, அல்லாஹ் கூறுவான்: 'என்னுடைய இன்ன அடியான் நோய்வாய்ப்பட்டிருந்தது உனக்குத் தெரியாதா? நீ அவனைப் போய் பார்க்கவில்லை. நீ அவனைப் பார்க்கச் சென்றிருந்தால், அங்கே என்னை நீ கண்டிருப்பாய் என்பது உனக்குத் தெரியாதா?

ஆதமின் மகனே! நான் உன்னிடம் உணவு கேட்டேன், ஆனால் நீ எனக்கு உணவளிக்கவில்லை என்று இறைவன் கேட்பான். அதற்கு, 'என் இறைவனே! நீயோ அகிலங்களின் இறைவன் ஆவாய்; உனக்கு நான் எப்படி உணவளிக்க முடியும்?' என்று அவர் கூறுவார். அதற்கு அல்லாஹ் கூறுவான்: 'என்னுடைய இன்ன அடியான் உன்னிடம் உணவு கேட்டார், ஆனால் நீ அவனுக்கு உணவளிக்கவில்லை. நீ அவனுக்கு உணவளித்திருந்தால், அதை என்னிடம் கண்டிருப்பாய் என்பது உனக்குத் தெரியாதா?

ஆதமின் மகனே! நான் உன்னிடம் தண்ணீர் கேட்டேன், ஆனால் நீ எனக்குத் தண்ணீர் புகட்டவில்லை.' அதற்கு, 'என் இறைவனே! நீயோ அகிலங்களின் இறைவன் ஆவாய்; உனக்கு நான் எப்படித் தண்ணீர் புகட்ட முடியும்?' என்று அவர் கேட்பார். அதற்கு அல்லாஹ் கூறுவான்: 'என்னுடைய இன்ன அடியான் உன்னிடம் தண்ணீர் கேட்டார், நீ அவனுக்குத் தண்ணீர் கொடுக்கவில்லை; நீ அவனுக்குத் தண்ணீர் புகட்டியிருந்தால், அதற்கான நற்கூலியை நான் வழங்கியிருப்பேன்.

(முஸ்லிம்: கிதாபுல் பிர்ரு வஸ்ஸிலா, பாபு ஃபழ்லி இயாதத்தில் மரீழ் - ஹதீஸ் எண்: 583) * * * * * * * * * *

## வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்

## இறைவன் மீதான நேசத்தின் காரணமாக ஏழைகளுக்கும் அனாதைகளுக்கும் கைதிகளுக்கும் உணவளிப்பவரே உண்மையான நம்பிக்கையாளர் ஆவார்

தஆம்' என்று விரும்பத்தக்க உணவுக்கே கூறப்படுமே தவிர, அழுகிய அல்லது பழைய உணவுக்கு அல்ல. சுருக்கமாக, ஒரு தட்டில் புதிய மற்றும் சுவையான உணவு வைக்கப்பட்டிருக்கும்போது, அதை உண்ணத் தொடங்கும் முன்பே ஓர் ஏழையின் குரலைக் கேட்டு, அதிலிருந்து எடுத்துக் கொடுப்பதே நன்மையாகும். பயனற்ற மற்றும் தேவையற்ற பொருட்களைச் செலவு செய்வதன் மூலம் எவரும் நன்மை செய்துவிட்டதாக வாதிட முடியாது. நன்மையின் வாசல் மிகவும் குறுகியதாகும். எனவே பயனற்ற பொருட்களைச் செலவு செய்வதன் மூலம் யாரும் அதற்குள் நுழைய முடியாது என்ற விஷயத்தை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.(ரிப்போர்ட் ஜல்ஸா, 1897, பக்கம்- 79) ஒழுக்கத்தைச் சீர்படுத்துவதுடன் உங்கள் தகுதிக்கு ஏற்ப தர்மம் செய்வதையும் வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்

یُطۡعِمُوۡنَ الطَّعَامَ عَلٰی حُبِّہٖ مِسۡکِیۡنًا وَّیَتِیۡمًا وَّاَسِیۡرًا

பொருள்: அவர்கள் இறைவனின் திருப்திக்காக ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும், கைதிகளுக்கும் உணவளிப்பார்கள்'. மேலும் அவர்கள் கூறுகிறார்கள்: 'நாங்கள் அல்லாஹ்வின் திருப்திக்காகவே உங்களுக்கு உணவளிக்கிறோம். அந்த நாளைக் குறித்து நாங்கள் அஞ்சுகிறோம், அது மிகவும் பயங்கரமான நாளாகும். (அல்-ஹகம் தொகுதி 5, எண் 24, ஜூலை 2, 1901, பக்கம் 2)

* * * * * * * * * * *

## தஃப்ஸீரே கபீரிலிருந்து

## மனிதனிடம் அநாதைகள் மற்றும் ஏழைகள் மீது உண்மையான அன்பு இருந்தால் பசியுள்ள நாட்களில் அவர்களுக்கு உணவளிப்பான்

اَوۡ اِطۡعٰمٌ فِیۡ یَوۡمٍ ذِیۡ مَسۡغَبَۃٍ ○ یَّتِیۡمًا ذَا مَقۡرَبَۃٍ ○ (90:15-16)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

ஒரு மனிதனிடம் அநாதைகள் மற்றும் ஏழைகள் மீதான உண்மையான அன்பு இருந்தால் மற்றும் அவர்களின் துன்பங்களை உணரக்கூடிய சரியான உணர்வு அவனிடம் இருந்தால் பின்னர் பசியுடன் இருக்கும் நாட்களில் அவர்களுக்கு உணவளிப்பது அவனது கடமையாக இருந்திருக்கும். அதாவது, பஞ்சத்தின்போது அவர்களை கருத்தில் கொண்டிருப்பான் அல்லது வறுமை மற்றும் பசியின் போது அவர்களுக்கு உணவு தானியங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்து கொடுத்திருப்பான். அவர் ஒவ்வொரு நாளும் நூறு ஒட்டகங்களை அறுப்பதாக நாம் வைத்துக் கொண்டால், அவர் அவற்றைச் தவறான சந்தர்ப்பத்தில் அறுக்கிறார் என்றே நாம் கூறுவோம். அநாதைகள் மற்றும் ஏழைகளுக்காக அவற்றை அறுத்து அவற்றின் இறைச்சியை அவர்களுக்கு பகிர்ந்து கொடுப்பதற்கான வாய்ப்பு அவருக்கு இருந்தது, அல்லது அவரே சமைத்து அவர்களுக்கு விருந்து கொடுத்து அவர்களின் பசியை அவர் போக்கியிருக்கலாம். இங்கே فِیۡ یَوۡمٍ ذِیۡ مَسۡغَبَۃٍ ○ என்ற சொற்கள் இதே நுட்பமான ஞானத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டுள்ளன. அதாவது நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, அவர் புகழுக்காகவும், பெயருக்காகவும் தனது பணத்தைச் செலவிடுகிறார்.

இதன் தொடர்ச்சி 2-ம் பக்கம்

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ

## எங்கு நீதி இருக்காதோ அங்கு பின்னர் அழிவுதான் நேரிடும் முஸ்லிம் சமுதாயம் மற்றும் உலகின் அமைதிக்காக துஆ செய்யுங்கள்

## அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையிலான போரின் பின்னணியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் உலக மக்களுக்கு நல்கிய அறிவுரைகள்

ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மார்ச் 6, 2026 அன்று வழங்கிய தமது குத்பா பேருரையில் ஈரான் அமெரிக்காவிற்கு இடையிலான போர் தொடர்பாக கவலையை வெளிப்படுத்தியவாறு உலகில் விரைவில் அமைதி நிலைபெறுவதற்காக வேதனை நிறைந்த அறிவுரைகளை வழங்கினார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த தூதுச் செய்தியின் நோக்கம், ஏக இறைவனை நம்புவது, அவனை வணங்குவது, அவனது ஏகத்துவத்தை நிலைநாட்ட பாடுபடுவது மற்றும் அவனது படைப்பினங்களின் உரிமைகளை நிறைவேற்ற முயற்சிப்பது ஆகும். நாம் அனைவரும் ஒரே உம்மத்தாகவும், சகோதரர்களாகவும் இருக்க வேண்டும். ஆனால், இன்று நமது செயல்பாடுகள் அதற்கு மாறாக உள்ளன. இஸ்லாமிய நாடுகள் வளங்களைக் கொண்டிருந்தாலும், அவை உலக வல்லரசுகளுக்கு முன்னால் பலவீனமாக உள்ளன. இஸ்லாமிய போதனைகளைச் செயல்படுத்துவதில் ஆர்வம் இல்லாததால் எதிரிகள் இதனைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இஸ்லாமிய உலகம் ஒற்றுமையாக இருக்க வேண்டும். அப்போதுதான் உலக நாடுகளின் தாக்குதல்களில் இருந்து தற்காத்துக் கொள்ளவும், நமது கௌரவத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும் முடியும். இதற்காகவே அல்லாஹ் இந்த காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை அனுப்பியுள்ளான்.

ஐரோப்பிய நாடுகள் மட்டுமல்ல, சில இஸ்லாமிய நாடுகளும் தற்போதைய குழப்பங்களுக்குக் காரணமாக உள்ளன. மேற்கத்திய நாடுகள் இஸ்லாமிய நாடுகளை பரஸ்பரம் மோதவிட்டு, அவற்றின் வளங்களைக் கைப்பற்ற முயற்சிக்கின்றன. முஸ்லிம்கள் ஒற்றுமையாக இருப்பதை அவர்கள் விரும்புவதில்லை. எனவே, நாம் இறைவனிடம் துஆ செய்ய வேண்டும்.

அமெரிக்கா பல இஸ்லாமிய நாடுகளில் ராணுவத் தளங்களை அமைத்துள்ளது. இது அந்த நாடுகளின் பாதுகாப்பிற்காக அல்ல, மாறாக அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே. ஈரான் எப்போதும் அச்சுறுத்தலாகக் காட்டப்பட்டு, அதன் மூலம் மற்ற நாடுகள் அமெரிக்காவின் உதவியை நாடும் சூழல் உருவாக்கப்பட்டது. ஈராக் போரின் போது நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் எச்சரித்ததைப் போல, இப்போதும் குழப்பங்கள் அதிகரித்து வருகின்றன.

மத்திய கிழக்கில் நடக்கும் போர்கள் மற்றும் மோதல்கள் பெரும் அழிவைத் தரும் என அஞ்சப்படுகிறது. ஈரான் மீதான தாக்குதல்கள் குறித்து எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. இதனால் அரபு நாடுகளின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்படும். ஒருபுறம் எண்ணெய் வளங்கள் முடக்கப்படும், மறுபுறம் பாதுகாப்புச் செலவுகள் அதிகரிக்கும். இந்த போர்ச் சூழல் ஒட்டுமொத்த அரபு உலகிற்கும் பெரும் நஷ்டத்தையே ஏற்படுத்தும்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகள் இதே கொள்கையைத்தான் கடைபிடித்து வந்தனர். இது இன்று நேற்றைய கொள்கை அல்ல, மாறாக நீண்டகால கொள்கையாகும். அதாவது, எங்கு வேண்டுமானாலும் இப்பகுதியின் வளங்களைக் கைப்பற்ற விரும்பி, அதற்கு ஏதேனும் ஒரு காரணத்தைக் கூறிவிடுகின்றனர். அவர்களுடன் சேராத நாடுகளுக்கு எதிராக மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது.

எங்கு நீதி இல்லையோ அங்கு அழிவுதான் வரும். இந்தச் சக்திகள் நூற்றுக்கணக்கான அப்பாவி குழந்தைகளைக் கொன்று வருகின்றன. பள்ளிக்கூடங்கள் மீது குண்டுவீச்சு நடத்தப்படும் இத்தகையப் போர் எங்கேனும் உண்டா? இதைக் கேட்பார் எவரும் இல்லை.

இஸ்லாம் 'தவ்ஹீத்' (ஏகத்துவம்) நிலைநாட்டவே வந்தது, இதற்காக முஸ்லிம் நாடுகள் முயற்சி செய்ய வேண்டும் மற்றும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இந்த வல்லரசு நாடுகளைத் தெய்வமாகக் கருதாதீர்கள், இல்லையெனில் இந்த நாடுகள் ஒவ்வொன்றாக அனைத்து இஸ்லாமிய நாடுகளையும் அவற்றின் வளங்களையும் கைப்பற்றிவிடும்.

நம்பிக்கையாளர்களில் இரு பிரிவினர் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டால் அவர்களுக்கு இடையே சமாதானம் செய்து வையுங்கள் சமாதானம் ஏற்பட்ட பிறகு, அவர்களில் யாராவது ஒருவர் மற்றவர் மீது தாக்குதல் நடத்தினால், தாக்குதல் நடத்தியவர் அல்லாஹ்வின் கட்டளையின் பக்கம் திரும்பும் வரை அவருக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்துப் போரிடுங்கள். அவர் அல்லாஹ்வின் கட்டளையின் பக்கம் திரும்பி வந்துவிட்டால், அந்த சண்டையிடுபவர்களுக்கு மத்தியில் நீதியுடன் சமாதானம் செய்து வையுங்கள்.

இந்தக் கட்டளை உலக அமைதிக்கு எவ்வளவு அவசியமோ, முஸ்லிம்களுக்கு அதைவிட முக்கியமானது. சமாதானம் செய்யும்போது சுயநலத்தைப் பார்க்காமல், அசல் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் அறிவுறுத்தியுள்ளான். பாகிஸ்தான் மற்றும் சீனா உள்ளிட்ட பிற நாடுகள் சமாதானம் செய்ய முன்வந்துள்ளன. ஈரான் உள்ளிட்ட அரபு நாடுகள் இதில் கவனம் செலுத்த வேண்டும்.

நமது பணி என்னவென்றால், துஆ செய்வதுதான். இந்த ரமலான் மாதத்தில் நமது தனிப்பட்ட தேவைகளுக்காக மட்டும் நாம் துஆ செய்யாமல், ஒட்டுமொத்த முஸ்லிம் உம்மத்திற்காகவும் மற்றும் உலக அமைதிக்காகவும் நாம் துஆ செய்வோமாக!

* * * * * * * * * *

முதல் பக்கத் தொடர்ச்சி ......(தப்ஸீரே கபீர்..)

இதிலிருந்து அவர் அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும் கூட உணவளித்திருக்கலாம் என்ற எண்ணம் வரக் கூடும்.

அல்லாஹ் இந்த ஐயத்தை நீக்கிவிட்டான். மேலும் கூறியுள்ளான்: அவரோ பணத்தை செலவிட்டார்; அவர் தனது ஒட்டகங்களை அறுத்துக் கொண்டிருந்தார்; ஆனால், அவர்கள் பசியுடன் இருந்த நாட்களில் அல்ல. அதாவது, பசியுடன் இருந்தவர்களுக்குத் தேவை இருந்தபோது, அவர் அவற்றை அறுக்கவில்லை. மாறாக, அவர் தனது புகழுக்கான பைத்தியம் உச்சத்தை எட்டியபோது, அவர் ஒரே நாளில் நூறு ஒட்டகங்களை அறுத்தார். அவர் உள்ளபடியே உண்மையான தேவையைக் கருத்தில் கொண்டு செயல்பட்டிருந்தால், பின்னர் அவர் நண்பர்களை விருந்துக்கு அழைத்தபோது ஒரு ஒட்டகத்தை மட்டும் அறுத்து விருந்து கொடுத்திருக்கலாம்; மேலும், மீதமிருந்த தொண்ணூற்று ஒன்பது ஒட்டகங்களை அநாதைகள் மற்றும் ஏழைகளுக்காக வைத்திருக்கலாம். அந்நிலையில் அவர்களுக்கு பசியின் துன்பம் நேர்ந்திருக்காது. எனவே, அவர் சமுதாயத் தேவையை கவனத்தில் கொள்ளவில்லை ; மேலும், தனது செல்வத்தை பொருத்தமற்ற சந்தர்ப்பத்தில் செலவு செய்து வீணாக்கி விட்டார். அவர் நமது பார்வையில் எந்தப் புகழுக்கும் தகுதியானவர் அல்ல, மக்கள் அவரை மரியாதையுடன் பார்ப்பதற்கு அவர் தகுதி படைத்தவரும் இல்லை.

இங்கே அநாதையுடன் ذَا مَقْرَبَةٍ என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட்டுள்ளன. ஏனெனில் உறவினரான அநாதையை, மனிதனுக்கு தன்னுடன் வைக்க நேரிடுகின்றது. மேலும் அவரது உணவிற்கான பொறுப்பு அல்லது கல்வி மற்றும் உடை போன்றவற்றிற்கான செலவுகளை மனிதனுக்கு பொறுத்துக் கொள்ள நேரிடுகிறது. ஒருவர் இந்தச் செலவுகளைத் தாமாகவே முன்வந்து ஏற்றுக்கொள்கின்றாரா அல்லது நிர்பந்தத்தின் காரணமாக ஏற்றுக் கொள்கின்றாரா என்பது வேறு விஷயமாகும். ஆனால், எவ்வாறிருப்பினும், மனிதன் தனது நெருங்கிய உறவினரான அநாதையைக் கருத்தில் வேண்டும் என்று குடும்பப் பொறுப்புகள் எதிர்பார்க்கின்றன. ஆனால் கூறினார்கள்: உங்களது நிலைமை என்னவென்றால், உங்களது நெருங்கிய உறவினராக இருக்கும் அநாதைக்குக் கூட நீங்கள் உணவளிப்பதில்லை. அவர்களோ உங்களது நெருங்கிய உறவினராக இருக்கின்றார்கள். உங்கள் நிலைமை மிகவும் ஆபத்தான நிலைக்கு தரம் தாழ்ந்து விட்டது என்பதற்கு இந்த விஷயம் சான்றாகும்.

நெருங்கிய உறவினரான அநாதைக்கு மட்டுமே உணவளிக்க வேண்டும்; மற்றவர்களுக்கு கூடாது என்பது இந்த வசனத்தின் பொருளன்று. மாறாக, வேறொரு அநாதையை வளர்ப்பது என்பது ஒருபுறம் இருக்கட்டும்! உங்களிடமிருந்து இதைக் கூட எதிர்பார்க்க முடியாது. அதாவது நீங்களோ உங்களுடைய நெருங்கிய அநாதைகளைக் கருத்தில் கொள்வதில்லை. மேலும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில்லை. ஒரு நெருங்கிய உறவினரின் பொறுப்பைக் கூட உங்களால் நிறைவேற்றுவதில் இந்த அளவு நீங்கள் அலட்சியமாக இருந்தால், பின்னர் தூரமான ஒரு பொறுப்பை நிறைவேற்றுவதில் உங்கள் கவனம் எப்படி இருக்க முடியும் ?

(தஃப்ஸீர் கபீர், பாகம் 8, பக்கம் 624, காதியான் பதிப்பு)

* * * * * * * * * * *

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இறை நேசம் குறித்த ஈமானை வலுவூட்டக் கூடிய சம்பவங்கள்**

**அருளுக்குரிய ரமலானையொட்டி ஜமாஅத் மக்களுக்கு துஆக்கள் செய்வதற்கான அறிவுரை**

மனிதன் ஒவ்வொரு கணமும் அல்லாஹ்வுக்கு அஞ்சி வாழ வேண்டும், மேலும் ஐவேளையும் அவனிடம் துஆ செய்துகொண்டே இருக்க வேண்டும் (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)

மனிதன் எப்போதும் தனது நல்முடிவிற்காக துஆவும், ஈமானின் உறுதிப்பாட்டிற்காகவும் முயற்சியும் செய்து கொண்டிருக்க வேண்டும். அதற்காக துஆவும் கேட்க வேண்டும். குறிப்பாக ரமலான் மாதத்தில் செய்யப்படும் துஆக்களில் ஒவ்வொருவரும், 'அல்லாஹ் நமது முடிவை நன்மையாக்கட்டும்! என்ற இந்த துஆவையும் செய்ய வேண்டும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 20 பிப்ரவரி 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **தப்லீஃக்** மாதம் **20 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

அல்லாஹ்வின் அருளால் நேற்று முதல் ரமலான் தொடங்கியுள்ளது. அல்லாஹ் இந்த நோன்புகளுக்கான மாதத்தை, குறிப்பாக அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும், நமது ஆன்மீக சீர்திருத்தத்திற்காகவும் நமக்கு வழங்கியிருக்கின்றான். இந்த மாதத்திலிருந்து அதிக அதிகமாக பயன்பெறுவதற்கு அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதிக்கும் நற்பேறு வழங்குவானாக!

ஆயினும், எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது, ரமலானுக்குப் பிறகும் நாம் இறை நேசம் மற்றும் இறை வணக்கத்தின் தரத்தை நிலைநிறுத்துவது மட்டுமல்லாமல், அதை உயர்த்துவதற்கும் முயற்சி செய்யும் போதுதான் உண்மையான பலன் கிடைக்கும்; அப்போதுதான் நாம் நமது படைப்பின் நோக்கத்தையும் நிறைவேற்றுபவர்களாக இருப்போம்.

கடந்த சில குத்பாக்களில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை நேசம், இறை வணக்க வழிமுறைகள் மற்றும் அதன் தரநிலைகள் மற்றும் அதன்படி அமல் செய்வதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நம்பிக்கையாளர்களுக்கு வழங்கிய அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் ஆகியவற்றைக் குறித்து நான் தொடர்ந்து எடுத்துரைத்துக் கொண்டிருந்தேன். பிறகு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை உண்மையாகப் பின்பற்றியது தொடர்பான சம்பவங்களையும் எடுத்துரைத்திருந்தேன். ஆக, இந்தக் கருத்து தற்போதும் தொடர்கிறது. இன்றும் ரமலான் தொடர்பாக இதுவே தொடர்ந்து இடம்பெற்று வரும்.

இதே அடிப்படையில், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் இருந்து அல்லாஹ்வுடன் அன்னாருக்கு இருந்த தொடர்பு மற்றும் துஆக்கள் குறித்து வெளிப்படுத்தும் சில சம்பவங்களை நான் எடுத்துரைப்பேன். எஜமானர் மற்றும் பேரன்பரின் இறை வணக்கங்கள் மற்றும் இறை நேசம் தொடர்பான அந்தச் சம்பவங்கள் எடுத்துரைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இதே நிலையில் நாம் ரமலான் மாதத்திற்குள் நுழைந்துள்ளோம். இதுவும் அல்லாஹ்வின் ஒரு சிறப்பு அருளாகும். நாம் நமது நிலைகளை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு நாம் நம்மை ஆய்வு செய்வதற்கும் இந்த அடிப்படையில் நற்பேறு கிடைத்துக் கொண்டிருக்கின்றது; மேலும் கிடைக்க முடியும்.

எனவே, நான் என்ன சம்பவங்களை எடுத்துரைப்பேனோ அல்லது எடுத்துரைக்கின்றேனோ, அவற்றை நமது ஆன்மீக நிலையை மேம்படுத்தவும், சுயபரிசோதனை செய்யவும் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும், நமது எஜமானரான முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரின் உண்மைப் பேரன்பரின் இறை வணக்க வழிமுறைகள் எவ்வாறு இருந்தனவோ அல்லது அல்லாஹ்வுடன் அவர்களுக்கு எத்தகைய தொடர்பு இருந்ததோ, அந்த விஷயங்கள் மற்றும் செயல்பாடுகளின்படி நாமும் அமல் செய்வதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். இந்தச் சம்பவங்களை வெறும் கதைகளாக செவியுற்று, மகிழ்வதோடு நின்றுவிடாமல், அவை நமக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சம்பவங்களில் இருந்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பை நான் சமர்ப்பிக்கிறேன். மதிப்பிற்குரிய மௌலவி முஹம்மது அப்துல்லாஹ் பட்டாலவி அவர்களின் கூற்றை அன்னார் (ரலி) எழுதியுள்ளார்கள். அநேகமாக 1907-ம் ஆண்டு நடந்த விஷயம் இது என்று அவர்கள் கூறியுள்ளார்கள். ஒருமுறை மறைந்த காஜி ஸியாவுத்தீன் அவர்களின் மகளான அமத்துர் ரஹ்மான் ஸாஹிபா அவர்கள்- இவர் எனது தாய்வழி உறவினராக இருந்தார் என்று அவர்கள் கூறுகிறார்கள்- ஒரு காகிதத் துண்டை என்னிடம் கொடுத்தார். அது குப்பையைப் போன்று இருந்தது. ஆனால், அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் (ரலி) ஆகியோரின் கைப்பட எழுதப்பட்ட வாசகங்கள் இருந்தன. எனவே நான் அதை மிகுந்த ஆர்வத்துடன் ஓர் அருளாகப் பெற்றுக் கொண்டேன்; மேலும் அதனை பத்திரப்படுத்தினேன். கூறுகின்றார்கள்:

அவை பின்னர், ஒருமுறை என்னிடமிருந்து எங்கோ தொலைந்து விட்டது. ஏதோ ஒரு புத்தகத்தில் வைக்கப்பட்டுவிட்டது. எவ்வாறாயினும், அதனுடன் ஒரு சம்பவத்திற்கு தொடர்பு உள்ளது. அதனை அமத்துர் ரஹ்மான் ஸாஹிபா அவர்களே எனக்கு கூறியிருந்தார்கள். ஏனெனில், அந்தக் காகிதத் துண்டில் மிகவும் அன்யோன்யமாக எழுதப்பட்டிருந்த வாசகங்கள் இருந்தன. மேலும், அந்தக் காகிதம் வெளிப்படையில் குப்பையைப் போன்று இருந்தது. அந்தக் காகிதத் துண்டில் எழுதப்பட்டிருந்த அந்த வாக்கியங்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இறைத் தொடர்பு, இறையச்சம் மற்றும் இறை வணக்கம் ஆகியவற்றின் மீது ஒளி பாய்ச்சுகின்றன.

கூறுகின்றார்கள்: எனவே, அதைப் பற்றி குறிப்பிடுவது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

அமத்துர் ரஹ்மான் ஸாஹிபா (ரலி) அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வீட்டில் தங்கியிருந்த அந்த நாட்களில் இந்தச் சம்பவத்தைக் கண்டார்கள்; அறிவிக்கின்றார்கள்.

ஒருநாள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களும் கண்களை மூடிக்கொண்டு காகிதத்தில் எழுத முடியுமா? முடியாதா? என்று ஒரு சிறிய பரிசோதனை செய்ய விரும்பினார்கள்.

தற்போது இது ஒரு குடும்பச் சூழலில் பரஸ்பரம் (தம்பதியருக்கு இடையே) நடந்த ஒரு விஷயம் ஆகும். இதில் கணவன், மனைவி இந்த பரிசோதனையை செய்கின்றனர்.

கூறுகின்றார்கள்: ஆக, அந்த ஒரு துண்டு காகிதத்தை எடுத்து

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அதில் இந்த ஒரு வாசகத்தை எழுதினார்கள். அது எனக்கு வரிக்கு வரி நினைவிருக்கிறது. அந்தக் காகிதம் தொலைந்துவிட்ட போதிலும், அது கிடைத்தால் அதில் இதே வார்த்தைகள் தான் எழுதப்பட்டிருக்கும் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்.

கண்களை மூடிக்கொண்டு ஹுஸூர் (அலை) அவர்கள் எழுதியது இதுதான்:

**மனிதன் ஒவ்வொரு கணமும் அல்லாஹ்வுக்கு அஞ்சி வாழ வேண்டும், மேலும் ஐவேளையும் அவனிடம் துஆ செய்துகொண்டே இருக்க வேண்டும்.**

இதுதான் ஹுஸூர் (அலை) அவர்கள் எப்போதும் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு அறிவுறுத்திய தரம். என்னைப் பின்பற்றுபவர்கள் மட்டுமல்ல, மாறாக, நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு நபரும் இறையச்சம் உள்ளவராகவும், எப்போதும் இறை வணக்கத்தில் கவனம் செலுத்துபவராகவும் இருக்க வேண்டும் என்பதே எப்போதும் அன்னாரின் எண்ணமாக இருந்து வந்தது.

எப்படியிருப்பினும், அந்தக் காகிதத்தில் ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள் எழுதியவையும் இருந்தன, அதையும் நான் எடுத்துரைத்து விடுகிறேன். அவை சாதாரண குடும்ப விவகாரங்கள் பற்றியவையாக இருந்தன. ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்களின் எளிய வார்த்தைகள் இவையாக இருந்தன:

'மஹ்மூத் எனது நேசத்திற்குரிய மகன் ஆவான். யாரும் அவரை எதுவும் சொல்ல வேண்டாம். மேலும் பின்னர் மற்றொரு வாக்கியம் குழந்தைகளைப் பற்றியதாகவே இருந்தது:

முபாரக் அஹ்மது பிஸ்கட் கேட்கிறான்.'

ஆக, எவ்வாறிருப்பினும் இவை இரண்டுமே சாதாரண வாக்கியங்களாக இருந்தன.

எழுதுகின்றார்கள்: இவை அன்னார் (ரலி) எழுதிய சாதாணமான குடும்ப விஷயங்களாக இருந்தன.

அடுத்து கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கையெழுத்து (கண்களை மூடி எழுதியதால்) சற்றே சிதைந்திருந்தாலும், அது மிகவும் உறுதியானதாக இருந்தது. கண்களை மூடிக்கொண்டு எழுதியிருந்தபோதிலும் கிறுக்கி எழுதியது போலத் தோன்றியது. ஆனால், எவ்வாறிருப்பினும் அதில் ஒரு முதிர்ச்சி இருந்ததுடன் அதை வாசிக்கவும் முடிந்தது.

கண்களை மூடிக்கொண்டு எழுதிய போதிலும், மற்ற சாதாரண எழுத்துக்களைப் போலவே வரிகள் நேராகவும், சீராகவும் அமைந்திருந்தன. ஒரு மனிதன் கண்களைத் திறந்து நேர்கோட்டில் எழுதுவது போலவே அவை அமைந்திருந்தன. ஆனால், ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் (ரலி) அவர்களின் எழுத்துக்கள் தமது இடத்திலிருந்து மேல், கீழாக இருந்தன. வரிகளும் நேர்கோட்டில் அமைந்திருக்கவில்லை. அது ஒருபுறம் இருக்கட்டும்! ஆனால் கூறுகின்றார்கள்: அன்னார் (அலை) எழுதிய விஷயம் என்னவாக இருந்தது? அதில் ஒரு சிறப்பு மிக்க விஷயம் இருந்தது. அது எனக்கு எப்போதும் மகிழ்ச்சியைத் தருகிறது. உண்மையில் அந்த மகிழ்ச்சிக்குரிய விஷயம் என்னவென்றால், தனது வீட்டில் எவ்விதப் பகட்டும் இன்றி அமர்ந்திருக்கும்போதும், திடீரென யோசிக்காமல் ஏதேனும் ஒரு விஷயத்தை ஹுஸூர் (அலை) அவர்களுக்கு எழுத நேரிட்டது; அப்போதும் அறிவுரை வழங்கும் சொற்களைத் தவிர வேறு எதுவும் அன்னாருக்குத் தோன்றவில்லை.

ஹஸ்ரத் உம்முல் மூஃமினீன் (ரலி) அவர்களின் எழுத்துக்கள் எத்தகையதாக இருந்தன என்றால், அவை சூழலுக்கு ஏற்பவும், அன்னாரின் சிந்தனையில் இடம் பெற்றிருக்கக் கூடியவையாகவும் இருந்தன.

ஆக, அவர்கள் தொடர்ந்து எழுதுகின்றார்கள்: உண்மை என்னவென்றால், இறைவனால் நியமிக்கப்பட்டவர்களுக்கும், மற்றவர்களுக்கும் இடையே உள்ள வித்தியாசம் இதுதான்: மனிதர்களை எவ்வாறு இறைவனுக்கு நெருக்கமாகக் கொண்டு வருவது? மேலும் அவர்களிடம் இறை வணக்கத்தின் ஆர்வத்தை எவ்வாறு உருவாக்குவது? என்று அன்னாரின் இதயத்தில் எப்போதும் ஒரு வேதனை இருந்தது.
(ஸீரத்துல் மஹ்தி, பாகம் 2, பக்கம் 148-149, ரிவாயத் 1204)

ஆக, இது ஒரு சாதாரண வீட்டுச் சூழலைப் பற்றிய விஷயமாக இருந்தாலும், இதில் மிகவும் ஆழமான ஒரு பெரும் படிப்பினை உள்ளது.

இதேபோன்று, ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் மற்றொரு சம்பவத்தை எடுத்துரைத்துள்ளார்கள். மியான் அப்துல்லாஹ் ஸன்னூரி ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: 1884-ஆம் ஆண்டு ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் காதியானுக்கு வெளியே எங்காவது சென்று தனிமையில் இறைதியானம் செய்யவும், இந்தியாவின் சில இடங்களைச் சுற்றிப் பார்க்கவும் எண்ணம் கொண்டார்கள். ஆக, குர்தாஸ்பூர் மாவட்டத்திலுள்ள சோஜன்பூர் என்ற இடத்திற்குச் சென்று தனிமையில் இருக்க எண்ணினார்கள். அது தொடர்பாக மியான் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் தமது கைப்பட ஒரு போஸ்ட் கார்டு எழுதி எனக்கு அனுப்பினார்கள். நான் அந்தப் பயணத்தில் என்னையும் உடன் வைத்துக் கொள்ளுமாறு வேண்டினேன், ஹுஸூர் (அலை) அவர்கள் ஒப்புதல் நல்கினார்கள். ஆனால், பின்னர் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு சோஜன்பூர் பயணம் தொடர்பாக, 'உமது முடிச்சுகள் ஹோஷியார்பூரில் நிறைவேறும்' என்ற இல்ஹாம் இறங்கியது.

எனவே, அன்னார் (அலை) சோஜன்பூர் செல்லும் திட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள். மேலும், ஹோஷியார்பூர் செல்வதற்குத் தீர்மானித்தார்கள். ஜனவரி 1886-ல் அன்னார் (அலை) ஹோஷியார்பூர் செல்லவிருந்தபோது, என்னைத் (மியான் அப்துல்லாஹ்) தபாலில் கடிதம் எழுதி காதியானுக்கு வரவழைத்தார்கள். மேலும், ஹோஷியார்பூரின் தலைவரான ஷேக் மெஹர் அலி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள்: நான் இரண்டு மாதங்களுக்காக ஹோஷியார்பூருக்கு வர விரும்புகிறேன்; நகரத்தின் ஓரத்தில், மேல் தளம் கொண்ட ஒரு வீட்டை ஏற்பாடு செய்யுங்கள்.

இரண்டு அடுக்கு வீடாக இருக்க வேண்டும்; ஊருக்கு வெளியில் இருக்க வேண்டும்.

ஷேக் மெஹர் அலி அவர்கள் 'தவீலா' என்ற பெயரில் பிரபலமான தமது ஒரு வீட்டை காலி செய்து விட்டார்கள்.

ஹுஸூர் (அலை) அவர்கள் பஹ்லியில் அமர்ந்தார்கள். பஹ்லி என்பது ஒரு சிறிய மாட்டு வண்டிக்கு கூறப்படும். அன்னார் (அலை) பியாஸ் நதி வழியாகப் புறப்பட்டுச் சென்றார்கள்.

மியான் அப்துல்லாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான், ஷேக் ஹாமித் அலீ (ரலி) மற்றும் ஃபத்ஹே கான் ஆகியோர் உடன் இருந்தோம். ஃபத்ஹே கான் என்பவர் ஹோஷியார்பூர் மாவட்டத்தின் டான்டா பகுதிக்கு அருகிலுள்ள ரஸூல்புரைச் சேர்ந்தவராக இருந்தார். அவர் ஹுஸூர் (அலை) மீது மிகுந்த பற்று கொண்டவராக இருந்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, மௌலவி முஹம்மது ஹுஸைன் பட்டால்வியின் செல்வாக்கினால் பின்னர் அவர் ஈமானை விட்டு விலகி விட்டார்.

ஹுஸூர் (அலை) நதிக்கரையை அடைந்ததும், ஆற்றைக் கடக்க ஒரு படகில் ஏறினார்கள். படகு செல்லத் தொடங்கியபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் என்னை நோக்கி கூறினார்கள்:

'மியான் அப்துல்லாஹ் (ரலி)! ஒரு முழுமையான நபரின் தோழமை என்பது இந்த நதியின் பயணத்தைப் போன்றதாகும்; அதில் கரை சேருவதற்கான நம்பிக்கையும் இருக்கின்றது; மேலும் மூழ்கிவிடுவதற்கான அச்சமும் இருக்கின்றது.

அதாவது ஒரு முழுமையான மனிதர், சான்றோர், ஓர் இறை நேசர் ஆகியோரின் நட்பில் இருக்கும் ஒருவருக்கு இரண்டு விதமான முடிவு நிகழக் கூடும். நாம் தற்போது படகில் செல்வது போல, அது நம்மைக் கரை சேர்க்கவும் முடியும் அல்லது அது நம்மை மூழ்கடிக்கவும் முடியும்.

மியான் அப்துல்லாஹ் கூறுகின்றார்கள்: ஹுஸூர் (அலை) அவர்களின் இந்தக் கூற்றை அப்போது நான் மேலோட்டமாகவே எடுத்துக்கொண்டேன். ஆனால், பின்னர் ஃபத்ஹே கான் முர்தத் ஆனபோதுதான் ஹுஸூர் (அலை) அவர்களின் இந்தக் கூற்று எனக்கு நினைவிற்கு வந்தது.

எவ்வாறிருப்பினும், கூறுகின்றார்கள்: நாங்கள் வழியில் ஃபத்ஹே கானின் கிராமத்தில் தங்கிவிட்டு, அடுத்த நாள் ஹோஷியார்பூரை சென்றடைந்தோம். அங்கே சென்றதும், ஹுஸூர் (அலை) அவர்கள் தவீலாவின் மேல் தளத்தில் தங்கினார்கள். எங்களுக்குள் பரஸ்பரம் எந்தவிதமான கருத்து வேறுபாடும் வந்துவிடக்கூடாது என்ற நோக்கத்துடன் எங்கள் மூவருக்கும் தனித்தனி பொறுப்புகளை ஹுஸூர் (அலை) வழங்கினார்கள். சமையல் செய்யும் பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. சந்தைக்குச் சென்று காய்கறி மற்றும் மளிகைப் பொருட்களை வாங்கி வருவது ஃபத்ஹே கானின் பொறுப்பாக இருந்தது. வீட்டு நிர்வாகம் மற்றும் விருந்தினர்களைக் கவனிக்கும் பொறுப்பில் ஷேக் ஹாமித் அலி நியமிக்கப்பட்டார்.

இதன் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் துண்டுப் பிரசுரம் மூலம் இவ்வாறு அறிவிப்பு செய்தார்கள்: அடுத்த 40 நாட்களுக்கு யாரும் என்னைச் சந்திக்க

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

வர வேண்டாம்; யாரும் என்னை விருந்துக்கு அழைக்கவும் வேண்டாம். இந்த 40 நாட்கள் கழிந்த பிறகு நான் இங்கே மேலும் 20 நாட்கள் தங்கியிருப்பேன். என்னைச் சந்திக்க விரும்புபவர்கள் அல்லது விருந்துக்கு அழைக்க எண்ணம் கொண்டவர்கள் அந்த நாட்களில் விருந்தளிக்கலாம்'. ஐயங்களை கேட்டு தெரிய விரும்புபவர்கள் அப்போது கேள்வி கேட்டுக் கொள்ளலாம்.

வீட்டு வாசலின் சங்கிலியை எப்போதும் உள்பக்கமாகப் பூட்டியே வைத்திருக்குமாறு எங்களுக்கு ஹுஸூர் (அலை) அவர்கள் உத்தரவிட்டார்கள்.

அதாவது கதவு உட்புறமாக பூட்டப்பட வேண்டும்.

நான் யாரையாவது அழைத்தால், எந்த அளவிற்கு அவசியம் இருக்குமோ அந்த அளவிற்கு மட்டும் அவர் எனது கூற்றுக்கு பதில் அளிக்க வேண்டும். ஹுஸூர் (அலை) அவர்கள் தங்கியிருந்த மேல் தளத்திற்கு தேவையின்றி யாரும் வரக்கூடாது; யாரும் அங்கே தங்கவும் கூடாது என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும், மியான் அப்துல்லாஹ் ஸாஹிப் கூறுகின்றார்கள்;

பின்னர் ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனக்கான உணவை மேல் தளத்திற்கே கொண்டு வந்து சேர்த்து விட வேண்டும்; ஆனால், நான் உணவு உண்பதற்காக காத்திருக்க வேண்டாம். பிறகு வேறொரு நேரத்தில் வந்து காலி பாத்திரங்களை எடுத்துச் செல்லுங்கள்.

பின்னர் ஹுஸூர் (அலை) அவர்கள் இவ்வாறும் கூறினார்கள்: நான் மாடியில் தொழுது கொள்வேன், ஏனென்றால் நான் தனிமைத் தவம் இருக்கிறேன். எனவே நான் மாடியிலேயே தனியாகத் தொழுது கொள்வேன், நீங்கள் அனைவரும் கீழே ஒன்றாகத் தொழுது வாருங்கள். எவ்வாறாயினும், ஜுமுஆ தொழுகை தொழுகை தொடர்பாக அன்னார் (அலை) இவ்வாறு கூறினார்கள்: ஜுமுஆ அவசியம் என்பதால், நகரின் ஓரத்தில் நாம் தனித்துத் தொழக்கூடிய ஏதேனும் பயன்பாட்டில் இல்லாத மஸ்ஜிதைத் தேடுங்கள். அதன்படி, நகருக்கு வெளியே ஒரு தோட்டம் இருந்தது, அதில் ஒரு சிறிய பயன்பாட்டில் இல்லாத மஜ்ஸித் இருந்தது. அங்கு ஹுஸூர் (அலை) அவர்கள் ஜுமுஆ நாளில் சென்று வருவார்கள். மேலும், எங்களுக்கு அங்கு தொழுகை நடத்துவார்கள், மேலும், அன்னாரே குத்பா பேருரை வழங்கி வந்தார்கள்.

மியான் அப்துல்லாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறிவந்தார்கள்: நான் உணவு கொண்டு சேர்ப்பதற்காக மேலே சென்று வருவேன், ஹுஸூர் (அலை) அவர்கள் தாமாக என்னிடம் எப்போதாவது ஏதாவது பேசினால் தவிர நான் அன்னாரிடம் எதுவும் பேசமாட்டேன். ஒருமுறை ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் என்னிடம், மியான் அப்துல்லாஹ்! இந்த நாட்களில் என் மீது இறைவனின் பெரும், பெரும் அருட் கதவுகள் திறந்துள்ளன, சில நேரங்களில் இறைவன் என்னுடன் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருக்கின்றான். இந்த நிகழ்வுகள் எழுதப்பட்டால் பல தாள்கள் நிரம்பி விடும் என்று கூறினார்கள்.

ஆக, மியான் அப்துல்லாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

வாக்களிக்கப்பட்ட மகன் தொடர்பான இல்ஹாம்களும் இதே தனிமைத் தவத்தின்போதுதான் கிடைத்தன, மேலும் தனிமைத் தவத்திற்குப் பிறகு ஹோஷியார்பூரிலிருந்தே அன்னார் (அலை) அந்த முன்னறிவிப்பை அறிவித்தார்கள். இது பிப்ரவரி 20,1886-ன் பிரசுரமாகும், இது ஜமாஅத்தில் முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பு என்ற பெயரால் அறியப்படுகிறது.

இன்று பிப்ரவரி 20 என்பது ஒரு சிறப்பு தற்செயல் நிகழ்வாகும், மேலும் வாக்களிக்கப்பட்ட மகனைப் பற்றிய முன்னறிவிப்பு மிகுந்த மகத்துவத்துடன் நிறைவேறும் நாளாகவும் இது இருக்கிறது.

முன்னறிவிப்பின்படி பிறந்த அந்த வாக்களிக்கப்பட்ட மகன் பிறந்தார், அவரது 52 ஆண்டுகால கிலாஃபத் காலம் நிலைத்திருந்தது, மேலும் அல்லாஹ் அன்னாருக்கு வெற்றிகளை வழங்கினான். முஸ்லிஹ் மவ்வூத் முன்னறிவிப்பில் இடம் பெற்றிருந்த அந்த அனைத்து முன்னறிவிப்புகளும், இல்ஹாம்களும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது (ரலி) அவர்களின் விஷயத்தில் நிறைவேறின.

நான் இந்த ஒற்றுமையை ஏன் கூறுகிறேன் என்றால், இந்த நிகழ்வு இன்றைய நாளன்று எனக்கு முன்னால் வந்திருக்கின்றது; இல்லையெனில் இது முன்னரோ அல்லது பின்னரோ வந்திருக்கலாம்.

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

ஆனால், **இது இன்றைய தினமே வர வேண்டும் என்பதும், நான் அதை எடுத்துரைக்க வேண்டும் என்பதும் இறைவனின் ஞானமாக இருந்தது.**

பிப்ரவரி 20 என்பது வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி தொடர்பான முன்னறிவிப்பு நாளாகும். அன்னார் (அலை) எவ்வாறு (ஹோஷியார்பூர்) சென்றார்கள்?; அங்கு எவ்வாறு தனித்திருந்து பிரார்த்தனை செய்தார்கள்? மேலும் அங்கு அன்னாருக்கு என்ன நற்செய்திகள் வழங்கப்பட்டன? என்று இந்தச் சம்பவத்தின் பின்னணியும் எடுத்துரைக்கப்பட்டுவிட்டது. இது தொடர்பான கூட்டங்களும் இன்றைய நாட்களில் ஜமாஅத்தில் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் வரலாற்றைத் தெரிந்துகொள்ள முடிகிறது. MTA தொலைக்காட்சியிலும் இது குறித்த நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன, அவற்றையும் பார்க்க வேண்டும்.

எவ்வாறாயினும் கூறுகின்றார்கள்: 40 நாட்கள் முடிந்த பிறகு, அறிவித்தபடி அன்னார் (அலை) அங்கேயே 20 நாட்கள் கூடுதலாக தங்கியிருந்தார்கள். அந்த நாட்களில் பல மக்கள் விருந்தும் அளித்தார்கள். பல மக்கள் மார்க்க ரீதியான கருத்துப் பரிமாற்றத்திற்காக வந்தனர். வெளியூரிலிருந்து ஹுஸூர் (அலை) அவர்களின் பழைய நண்பர்களும் விருந்தினர்களாக வந்தனர். அதே நாட்களில் 'முரளி தர்' என்பவருடன் விவாதம் நடைபெற்றது, அது 'சுர்மா சஷ்மே ஆர்யா' நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டு மாத காலம் முடிந்ததும், ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் அதே வழிப் பாதையில் மீண்டும் காதியானிற்குப் புறப்பட்டார்கள். ஹோஷியார்பூரிலிருந்து ஐந்து மைல் தொலைவில் ஒரு பெரியவரின் கல்லறை உள்ளது. இங்கு தற்போது மற்றொரு சம்பவத்தையும் எழுதியுள்ளார்கள்: அதாவது, பயணத்தின்போது, ஒரு தோட்டம் இருந்த இடத்தில் ஹுஸூர் (அலை) அவர்கள் சிறிது நேரம் வண்டியிலிருந்து இறங்கி வந்தார்கள்; மேலும் கூறினார்கள்: இது ஒரு நல்ல நிழல் தரும் இடமாகும்; இங்கே சிறிது நேரம் தங்குவோம்.

பிறகு, ஹுஸூர் (அலை) அவர்கள் அந்தப் பெரியவரின் கல்லறையை நோக்கிச் சென்றார்கள்.

மியான் அப்துல்லாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நானும் பின்னாலே சென்றேன், ஷேக் ஹாமித் அலி (ரலி) மற்றும் ஃபத்ஹே கான் ஆகியோர் வண்டிக்கு அருகாமையிலேயே இருந்தனர். அன்னார் (அலை) கல்லறையின் நுழைவாயிலைத் திறந்து உள்ளே சென்றார்கள்; மேலும் கல்லறையின் தலைப்பகுதியில் நின்றபடி துஆவிற்காக கைகளை ஏந்தினார்கள். மேலும், சிறிது நேரம் துஆ செய்து கொண்டிருந்தார்கள். பின்னர் திரும்பி வந்து என்னை நோக்கி கூறினார்கள்:

நான் துஆவிற்காகக் கைகளை ஏந்தியபோது, இது எந்தப் பெரியவரின் கல்லறையோ அவர் அதிலிருந்து வெளிப்பட்டு என் முன்னே முழங்காலிட்டு அமர்ந்து விட்டார். நீங்கள் மட்டும் என்னுடன் இல்லையென்றால் நான் அவரிடம் உரையாடியும் இருப்பேன். அவரது கண்கள் பெரியவை மற்றும் நிறம் மாநிறமாக இருந்தது'.'

பிறகு அன்னார் (அலை) கூறினார்கள்: 'பாருங்கள்! இங்கே பாதுகாவலர் யாராவது இருந்தால், இந்தப் பெரியவரைப் பற்றிய விவரங்களைக் கேளுங்கள்! அதன்படி, ஹுஸூர் (அலை) அவர்கள் அங்கிருந்த பாதுகாவலரிடம் விசாரித்தார்கள். அவர் கூறினார்: 'நான் அவரைப் பார்த்ததில்லை, ஏனெனில் அவர் இறந்து சுமார் நூறு ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், அவர் இந்தப் பகுதியின் மிகப்பெரிய பெரியவர் என்றும், இந்தப் பகுதியில் அவருக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது என்றும் நான் எனது மூதாதையர்களிடமிருந்து கேள்விப்பட்டுள்ளேன். ஹுஸூர் (அலை) அவர்கள் அவரிடம், அவரது தோற்றம் எப்படி இருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு, 'அவர் மாநிறமாகவும், பெரிய கண்களைக் கொண்டவராகவும் இருந்ததாகக் கேள்விப்பட்டுள்ளேன்' என்று அவர் கூறினார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு காதியானிற்கு சென்றடைந்தோம். அந்தப் பெரியவர் முன்னால் வந்து அமர்ந்தபோது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எடுத்துரைத்த அதே தோற்றத்தைத்தான் அவரும் எடுத்துரைத்தார். இறந்தவர்களுடன் சில நல்ல மனிதர்களுக்கும், இறைநேசர்களுக்கும், இறைத் தூதர்களுக்கும் இதே போன்று உரையாடலும் நிகழ்ந்து விடுகின்றது; மேலும் சிலர் காட்சியளிக்கின்றனர் என்று சில நபர்கள் கூறுகின்றனர். இவை வல்ல அல்லாஹ்வின்

தனித்துவமான வழி முறைகள் ஆகும். எது எப்படியோ, இந்தப் பயணம் நிறைவுற்றது; அவர்கள் காதியான் சென்றடைந்தனர்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: 'இந்த பயணத்தைப் பற்றி நான் மியான் அப்துல்லாஹ் (ரலி) அவர்களிடம் விசாரித்தேன். அந்தத் தனிமைக் காலத்தில் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? எவ்வாறு இறை வணக்கம் செய்து வந்தார்கள்? என்று கேட்டேன். அதற்கு, மியான் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்: இது எங்களுக்குத் தெரியாது; ஏனென்றால் அன்னார் (அலை) மேல் தளத்தில் தங்கியிருந்தார்கள், எங்களுக்கு மேலே செல்ல அனுமதி இல்லை. உணவு முதலானவற்றிற்காக நாங்கள் அனுமதி பெற்றே மேலே செல்வோம்.

மியான் அப்துல்லாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறிவந்தார்கள்: ஒருநாள் நான் உணவு வைக்க மேலே சென்றபோது, ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் கூறினார்கள்: எனக்கு بُوْرِكَ مَنْ فِيْهَا وَمَنْ حَوْلَهَا என்ற ஓர் இல்ஹாம் வந்துள்ளது. ஹுஸூர் (அலை) அவர்கள் அதன் விளக்கமாக கூறினார்கள்: مَنْ فِيْهَا என்பதன் பொருள் நான் ஆவேன். அதாவது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார். மேலும் مَنْ حَوْلَهَا என்பதன் பொருள் என்னுடன் இருப்பவர்களாகிய நீங்கள் ஆவீர்கள்.

மியான் அப்துல்லாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: 'நானோ நாள் முழுவதும் வீட்டிலேயே இருந்து வந்தேன்; வெள்ளிக்கிழமை மட்டும் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களுடன் வெளியே செல்வேன். ஷேக் ஹாமித் அலி (ரலி) அவர்களும் பெரும்பாலும் வீட்டிலேயே இருப்பார்கள், ஆனால் ஃபத்ஹே கான் பெரும்பாலும் நாள் முழுவதும் வெளியே இருப்பார். அநேகமாக இந்த இல்ஹாம் வந்த நேரத்திலும் அவர் வெளியேதான் இருந்தார். இது ஹஸ்ரத் மியான் பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களின் கருத்தாகும்.

மியான் அப்துல்லாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: 'அந்த நாட்களில் ஃபத்ஹே கான், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மீது எவ்வளவு நம்பிக்கை கொண்டிருந்தார் என்றால், அவர் எங்களிடம் பேசும்போது, நான் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களை ஒரு நபியாகவே கருதுகிறேன் என்று கூறுவார். பழைய நம்பிக்கையின் அடிப்படையில், இனி ஒரு நபி எப்படி வர முடியும்? இனி நபி வரமுடியாதே என்று நான் அப்போது பதற்றமடைந்து வந்தேன். ஆனால், ஃபத்ஹே கான் அந்த நேரத்தில் அன்னார் (அலை) மீது எவ்வளவு நம்பிக்கை கொண்டிருந்தார் என்றால், ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் இன்னும் பைஅத் வாங்காத போதே, எந்த வகையான வாதமும் செய்திருக்காத போதே அன்னாரை நபி என்று அவர் கூறிவந்தார். இது மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முந்தைய விஷயமாகும். ஆனால் அவருக்கு ஒரு தடுமாற்றம் ஏற்பட்டபோது அவர் முர்தத் ஆகிவிட்டார்.

எனவே, மனிதன் எப்போதும் தனது நல்முடிவிற்காக துஆவும், ஈமானின் உறுதிப்பாட்டிற்காகவும் முயற்சியும் செய்து கொண்டிருக்க வேண்டும். அதற்காக துஆவும் கேட்க வேண்டும். குறிப்பாக ரமலான் மாதத்தில் செய்யப்படும் துஆக்களில் ஒவ்வொருவரும், **'அல்லாஹ் நமது முடிவை நன்மையாக்கட்டும் என்ற இந்த துஆவையும் செய்ய வேண்டும்.**

மியான் அப்துல்லாஹ் ஸாஹிப் (ரலி) அவர்கள் இதனையும் எடுத்துரைத்தார்கள்: அதாவது, ஒருமுறை நான் உணவு பரிமாறச் சென்றபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் என்னிடம் கூறினார்கள்: 'அல்லாஹ் என்னிடம் உரையாடுகிறான்; என்னுடன் பேசுகிறான்; இதோ இந்த மனிதன் பேசுவது போல. என்னிடமுள்ள விஷயங்களில் ஒரு சிறிய பகுதியை மட்டும் நான் வெளிப்படுத்தினால், இப்போது என்னைச் சுற்றி தென்படும் இந்த ஆதரவாளர்கள் அனைவரும் விலகிச் சென்றுவிடுவார்கள்.' உண்மையில் செயல் அளவிலும் அவ்வாறே நடந்தது. அன்னார் (அலை) தமது வாதத்தை முன்வைத்தபோது, சிலர் விலகிச் சென்றனர், மேலும் எதிர்ப்பில் தீவிரமாகி விட்டனர். ஏனெனில், அல்லாஹ் இவ்வாறு பேச முடியும் என்பதை அவர்களால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை.

(ஆதாரம்: ஸீரத்துல் மஹ்தி, பாகம் 1, பக்கம் 62-65, அறிவிப்பு எண்: 88)

இதேபோன்று, ஹுஸூர் (அலை) அவர்கள் தொழுத விதம் குறித்த மற்றொரு நிகழ்வு உள்ளது. தொழுகையில் கைகளை எப்படி கட்ட வேண்டும்? மற்றும் தொழுகையின் பல்வேறு அசைவுகள் எவ்வாறு இருக்க வேண்டும்? என்பது குறித்த மார்க்கச் சட்டங்களைப் பற்றி சில மக்கள் கேட்கின்றனர். ஆக, மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் எவ்வாறு இறை வணக்கம் செய்தார்கள்? மற்றும் அன்னாரின் தொழுகை எவ்வாறு இருந்தது? என்பதைப் பார்ப்போம்! அத்தகைய மக்களுக்காக ஒரு சம்பவம் வருகின்றது.

மியான் அலி முஹம்மது ஸாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் தொழுகையின் வழிமுறையை எடுத்துரைக்கின்றார்கள்:

ஒருமுறை ஹுஸூர் (அலை) அவர்கள் சுன்னத் தொழுது கொண்டிருந்ததை நான் கண்டேன். ஃபஜ்ர் தொழுகைக்கு முன்னர் அன்னார் (அலை) சுன்னத் தொழுது கொண்டிருந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்கள் கைகளைத் தொப்புளுக்கு மேல் கட்டியிருந்தார்கள். மேலும் வலது கையின் நடுவிரல் முழங்கை வரை எட்டியிருக்கவில்லை, மாறாக, அதற்கு சற்று பின்னாலேயே இருந்தது. ஸஜ்தா செய்யும்போது, இரு கைகளுக்கும் நடுவில் நெற்றி இருந்தது; மேலும் மூக்கை தரையில் படுமாறு வைத்திருந்தார்கள். விரல்கள் நேராக கஅபாவின் திசையில் இருந்தன. கரங்கள் நேராக இருந்தன. அன்னார் (அலை) ஸஜ்தாவிலிருந்து எழும்போது, அன்னாரின் அருளுக்குரிய தலைப்பாகை தளர்வாக இருந்ததால் சற்றே பின்னோக்கிச் சரிந்தது; அதனை அன்னார் (அலை) விரலால் சரிசெய்து கொண்டார்கள்.

எவ்வாறிருப்பினும், இந்த சுன்னத் தொழுகையை அன்னார் (அலை) மஸ்ஜிதே அக்ஸாவில் தமது தந்தையாரின் கல்லறைக்குத் தெற்குப் பகுதியில் நின்றவாறு தொழுதார்கள். அதன் பிறகு ஃபஜ்ர் தொழுகை தொடங்கியது. அதனை ஹஸ்ரத் மௌலவி நூருத்தீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் இமாமாக நின்று நடத்தினார்கள்.'

(ஆதாரம்: ரிவாயாத் அஸ்ஹாபே அஹ்மத், பாகம் 2, பக்கம் 13)

இதேபோன்று, ஹஸ்ரத் முஹம்மது ஜமீல் ஸாஹிப் அறிவிக்கின்றார்கள்: பிளேக் நோய் முதன்முதலில் பரவிய நாட்களில், ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் தோட்டத்தில் முகாமிட்டிருந்தார்கள். அதாவது, தமது முழு குடும்பத்துடன் அங்கு குடிபெயர்ந்திருந்தார்கள். கூறுகின்றார்கள்: நாங்கள் இரவில் காவல் காப்போம். பிளேக் நோய் பரவியிருந்ததால் திறந்தவெளியே பாதுகாப்பானது என்பதால் அன்னார் (அலை) அங்கு சென்றிருந்தார்கள்.

எப்படியிருந்தாலும், அவர்கள் கூறுகின்றார்கள்:

இரவில் காவல் காக்கும் போது, நாங்கள் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களின் கூடாரத்திற்கு அருகாமையில் கடந்து செல்வோம். அப்போது ஹுஸூர் (அலை) அவர்கள் தொழுகையில் மும்முரமாக இருப்பதையே நாங்கள் காண்போம். அன்னார் (அலை) எப்போது உறங்குவார்கள்? என்று இறைவனே அறிவான். (ஆதாரம்: ரிவாயத் அஸ்ஹாப் அஹ்மத், பாகம் 2, பக்கம் 358)

இதேபோன்று, ஹஸ்ரத் சவ்த்ரி பாயி அப்துர் ரஹ்மான் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹுஸூர் (அலை) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுகையை மிகவும் உருக்கத்துடன் தொழுவார்கள். சிறிய பள்ளிவாசலை ஒட்டிய அறையிலும் கூட அந்த ஓசை கேட்கும். ஹுஸூர் (அலை) அவர்கள் اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ என்ற வசனத்தை மீண்டும் மீண்டும் ஓதுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.'

( ரிவாயத்- அஸ்ஹாப் அஹ்மத், பாகம் 2, பக்கம் 336)

எனவே, அல்லாஹ் நம்மை எப்போதும் நேர்வழியில் நிலைநிறுத்த நாமும் இந்தத் துஆவை மீண்டும், மீண்டும் ஓத வேண்டும்.

ஹஸ்ரத் மாஸ்டர் நஸீர் ஹுஸைன் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஹுஸூர் (அலை) அவர்களின் தஹஜ்ஜுத் தொழுகையின் நிலையை எடுத்துரைத்தவாறு எழுதுகின்றார்கள்:

ஒருமுறை ஜீலம் நோக்கிச் செல்லும் வழியில் லாகூரில் நாங்கள் எனது தந்தை வழிப் பாட்டனார் மியான் சிராக் தீன் ஸாஹிப் மர்ஹூம் அவர்களுடைய முபாரக் மன்சில்' என்ற வீட்டில் தங்கியிருந்தோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் அன்றிரவை அங்கேயே கழித்தார்கள். ஓர் அறையில் ஹுஸூர் (அலை) அவர்கள் உறங்குவதற்காக இடம் ஏற்பாடு செய்யப்பட்டது. கூறுகின்றார்கள்: நானும் அதே அறையின் வெளி வளாகத்தில் கதவுக்கு அருகில் படுத்து உறங்கினேன்.

இரவு சுமார் 3 மணியளவில் நான் கண்விழித்தபோது, அறைக்குள் ஹுஸூர் (அலை) அவர்களைப் பார்த்தபோது, ஹுஸூர் (அலை) அவர்களோ தொழுது கொண்டிருந்தார்கள். நானும் உளூ



செய்துவிட்டு ஹுஸூர் (அலை) அவர்களுக்குப் பின்னால் சற்று இடைவெளியில் நின்று தொழத் தொடங்கினேன். ஹுஸூர் அவர்கள் எவ்வளவு நேரம் கியாம் அல்லது ருகூஃ செய்கின்றார்களோ அல்லது ஸஜ்தா செய்கின்றார்களோ, அதே அளவு நானும் செய்ய மிகவும் முயற்சி செய்தேன். ஆனால் என்னால் முடியவில்லை. வெறும் இரண்டு ரக்அத்துகளிலேயே நான் கடுமையாக சோர்வடைந்து விட்டேன். ஆனால், ஹுஸூர் (அலை) அவர்களோ நான் எந்த ரக்அத்தில் கலந்துகொண்டேனோ அந்த ரக்அத்திலேயே இருந்தார்கள்.

அதாவது அவர் எந்த ரக்அத்தில் கலந்து கொண்டிருந்தாரோ இன்னும் அந்த இரண்டு ரக்அத்துகளையே ஹுஸூர் (அலை) அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள்.

அன்னார் (அலை) அப்போதுதான் ஆரம்பித்திருந்தார்கள். மேலும் கியாம் நிலையில்தான் இருந்தார்கள்; அதற்குள்,நான் களைப்படைந்து விட்டேன் என்று அவர் கூறுகின்றார். பின்னர் அவர் கூறுகின்றார்: நான் அந்தத் தொழுகையை விட்டுவிட்டு, தனியாக தொழத் தொடங்கினேன்.

இது தமது எஜமானரைப் பின்பற்றியவாறு அன்னார் (அலை) மேற்கொண்ட இறை வணக்கத்திற்கான ஒரு முன்மாதிரியாக இருந்தது. மேலும், இது அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையை எப்படி செலுத்த வேண்டும்? என்பதற்கான முயற்சியாக இருந்தது.

எப்படியிருப்பினும் கூறுகின்றார்கள்: நாங்கள் பகல் நேரத்தில் ஹுஸூர் (அலை) அவர்களைச் சுற்றி அமர்ந்திருந்தபோது, ஹுஸூர் (அலை) அவர்கள் ஜமாஅத்தினருக்கு தஹஜ்ஜுத் தொழுவதை வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள். தஹஜ்ஜுத் தொழுமாறு அறிவுறுத்தி வந்தார்கள். அப்போது, ஒருவேளை தஹஜ்ஜுத் தொழ முடியாவிட்டால், குறைந்தபட்சம் என்ன செய்ய வேண்டும்? என்று அடியேன் அன்னாரிடம் கேட்டேன்.

தஹஜ்ஜுத் தொழ முடியாவிட்டால் பிறகு என்ன செய்ய வேண்டும்? என்று மக்கள் கேட்கின்றனர் அல்லவா!

அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்:

அந்த நேரத்தில் அதிகமாக இஸ்திஃக்ஃபார் செய்ய வேண்டும்; இறைவனை அதிகமாகப் புகழ்ந்து துதிக்க வேண்டும். இதன் மூலம் மீண்டும் தஹஜ்ஜுத் தொழுவதற்கான வாய்ப்பு கிடைத்துவிடும்.

இப்போது அன்னார் (அலை) கற்றுக்கொடுத்த இந்த துஆக்கள், தஹஜ்ஜுத்திற்கு மாற்றாக அமையும் என்பதற்காக அல்ல; மாறாக, இதன் மூலம் தஹஜ்ஜுத் தொழுவதற்கான நற்பேறு கிடைக்கும் என்பதற்காகத்தான்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களும் எழுதியுள்ளார்கள்:

தஹஜ்ஜுத் தொழுவதில் என்னிடம் கவனக் குறைவு ஏற்படும்போது, (இந்தக் கூற்று அநேகமாக மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களுடையதாகும் அல்லது இந்த அறிவிப்பாளரின் கூற்றாக இருக்கும்) நான் இதன்படி அமல் செய்கிறேன், எனக்கு தஹஜ்ஜுத் தொழுவதற்கான நற்பேறு கிடைத்துவிடுகிறது.(ரிவாயத் -அஸ்ஹாப் அஹ்மத், பாகம் 3, பக்கம் 178)

எனவே, சோம்பல் நிலவும் நாட்களில் நாம் தற்போதும் பின்பற்ற வேண்டிய வழிமுறை இதுவாகும்.

இன்றைய நாட்களில் நாம் ரமலான் மாதத்தைக் கடந்து கொண்டிருக்கிறோம். மேலும் தஹஜ்ஜுத் தொழுவதற்கு கொஞ்சமாவது நற்பேறு கிடைத்து விடுகின்றது. ஒருவேளை வாய்ப்பு கிடைக்காவிட்டாலும் கூட முயற்சி செய்ய வேண்டும். சந்தேகமின்றி மஸ்ஜித்களில் தராவீஹ் தொழுகை நடைபெறுகிறது. பலவீனமானவர்கள், நோயாளிகள் அல்லது சரியான நேரத்தில் அதிகாலை எழ முடியாதவர்களுக்கு அல்லது அதிக நேரம் செலவழிக்க முடியாதவர்களுக்கு இது ஒரு மாற்றாக அமைகிறது. ஆனால், தஹஜ்ஜுத்தின் முழுமையான உரிமையை நிறைவேற்ற விரும்புபவர்களுக்கு இது ஒரு முழுமையான மாற்றாக முடியாது.

இரவில் எழுந்து தஹஜ்ஜுத் தொழுவதே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்தும், அவர்களின் உண்மையான பேரன்பரின் வழியுமாக இருக்கின்றது.

எனவே, ஒருவேளை நீங்கள் தராவீஹ் தொழுதிருந்தாலும் கூட, இரண்டு அல்லது நான்கு ரக்அத்துகள் நஃபில் என்றாலும் பரவாயில்லை, கண்டிப்பாக தஹஜ்ஜுத் தொழுங்கள்.

இதேபோன்று, ஹஸ்ரத் கைருதீன் ஸாஹிப் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்:

Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

ஒருமுறை வசந்த காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் காலை சுமார் எட்டு மணி அளவில் காதியானிலிருந்து நடைப் பயிற்சிக்காகப் புறப்பட்டார்கள். அவர்கள் 'பெய்னி' மற்றும் 'காதர் ஆபாத்' ஆகிய இடங்களுக்கு இடைப்பட்ட அந்தப் பாதையில் சென்றார்கள், அதனை 'சாலை' என்றும் கூறுகின்றனர். காதியானின் நில எல்லைக்குள் அன்னார் (அலை) இரண்டு ரக்அத்துகள் நஃபில் தொழுதார்கள், பின்னர் எங்கள் கிராமங்களுக்கு அருகில் சென்று மீண்டும் காதியானுக்குத் திரும்பி வந்து விட்டார்கள்.' (ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மது, பாகம் 3, பக்கம் 90).

அதாவது, நடைப்பயிற்சியின் போது கூட அன்னாருக்கு இறைவணக்கத்திற்கான கவனம் இருந்து வந்தது.

**தற்போது காதியானில் வசிப்பவர்களின் பணி என்னவென்றால், அன்னாரோ காதியானுக்கு உள்ளேயும், அதன் எல்லைகளிலும் நஃபில்களையும், தொழுகைகளையும் நிறைவேற்றியுள்ளார்கள், எனவே அதன் புனிதத்தை கருத்தில் கொள்ளுங்கள். மேலும் இந்த ஊரின் உரிமையை நிறைவேற்றியவாறு உங்களுடைய இறை வணக்கத்தின் தரங்களை உயர்த்திக் கொள்ளுங்கள்.**

ஹஸ்ரத் மலிக் நியாஸ் முஹம்மது ஸாஹிப் (ரலி) அறிவிக்கின்றார்கள்: '1904-ல் நான் காதியானுக்குச் சென்றபோது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கரம் தீன் வழக்கு தொடர்பாக குர்தாஸ்பூருக்கு சென்றிருந்தார்கள். நானும் அங்கே சென்றபோது, ஒரு குளத்திற்கு அருகில் ஒரு வீட்டில் ஹுஸூர் (அலை) அவர்கள் தங்கியிருந்தார்கள். மேலும் ஜமாஅத் சகோதரர்களும் அங்கே தங்கியிருந்தார்கள். லங்கர் கானாவும் அதன் ஒரு பகுதியில் இயங்கிக் கொண்டிருந்தது. நீதிமன்றத்தில் ஹுஸூர் (அலை) அவர்களுக்காக ஒரு விரிப்பு விரிக்கப்பட்டிருந்ததை நான் பார்த்தேன். மேலும், ஹுஸூர் (அலை) அவர்கள் அதில் அமர்ந்திருந்தார்கள், மற்ற தோழர்களும் அதன் மேல் அமர்ந்திருந்தார்கள். அது ஒரு பெரிய விரிப்பாக இருந்தது; அதில் அனைவரும் அமர்ந்திருந்தனர்.

கூறுகின்றார்கள்: ஹுஸூர் (அலை) அவர்கள் எப்போதும் உளூவுடன் இருப்பதைப் பற்றி ஒரு விஷயத்தை நான் கவனித்தேன். அது குறிப்பாக எனக்கு நினைவில் உள்ளது. அதாவது ஹுஸூர் (அலை) அவர்கள் சிறுநீர் கழிப்பது முதலானவற்றிற்காக செல்லும்போது, அதற்குப் பிறகு கண்டிப்பாக உளூச் செய்து கொள்வார்கள். இதிலிருந்து ஹுஸூர் (அலை) அவர்கள் எப்போதும் உளூவுடன் இருக்கின்றார்கள் என்று எனக்கு உறுதியான நம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

அன்னார் (அலை) ' .

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ

என்பதை மிக மெதுவாகத் தொடர்ந்து ஓதிக்கொண்டே இருப்பார்கள்.

(ரிவாயத், அஸ்ஹாபே அஹ்மத், தொகுதி 2, பக்கம் 27)

ஹஸ்ரத் சவ்த்ரி பாயி அப்துர் ரஹீம் ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஆரம்ப நாட்களில், ஹுஸூர் (அலை) அவர்களின் வழக்கமாக இந்த விஷயம் இருந்தது. அதாவது, பொதுவாக ஹுஸூர் (அலை) அவர்கள் தொழுகைக்காக மற்ற அனைவருக்கும் முன்பாகவே பள்ளிவாசலுக்கு வந்துவிடுவார்கள். எனவே ஒருமுறை நான் எல்லாரையும் விட முன்னதாகவே அங்கு சென்றடைய முயற்சித்தேன், ஆனால், அப்போதும் ஹுஸூர் (அலை) அவர்கள் ஏற்கனவே இருந்தார்கள்.

(ரிவாயாத்தே அஸ்ஹாபே அஹ்மத், தொகுதி 2, பக்கம் 336)

ஹுஸூர் அன்வர் (அலை) அவர்கள் தமது இளமைப் பருவத்தின் ஒரு பகுதியை அதாவது சுமார் ஏழு ஆண்டுகளை ஸியால்கோட்டில் கழித்தார்கள். அப்போதும் கூட அன்னார் (அலை) கழித்த இரவு, பகலில் பெரும்பாலும் இறை நேசம் என்பது மிக முக்கிய பண்பாக இருந்தது.

யாரெல்லாம் ஹுஸூர் அவர்களின் ஸியால்கோட் வாழ்க்கையை எடுத்துரைத்தார்களோ, அவர்கள் அனைவரும் ஹுஸூர் (அலை) அவர்களின் தனிமை, தொழுகை மற்றும் திருக்குர்ஆன் ஓதுவதில் அன்னார் (அலை) காட்டிய ஆழ்ந்த ஈடுபாட்டைச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஸியால்கோட்டில் மரியாதைக்குரியவர்களாகவும், பெரியவர்களாகவும் கருதப்பட்ட சில நபர்களின் சாட்சியங்களை நான் முன்வைக்கிறேன்.

ஹக்கீம் மஸ்ஹர் ஹுஸைன் ஸாஹிப் எழுதுகின்றார்கள்:

இது எவருடைய சாட்சியம்

என்றால், அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வாதம் செய்த பிறகு, அஹ்மதிய்யத்தை எதிர்ப்பவர்களின் முன் வரிசையில் சென்று சேர்ந்து கொண்டவர் ஆவார். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் சில நிகழ்வுகளை நாவல் வடிவில் எழுதி விமர்சனங்களை முன்வைத்தவர் ஆவார். இருப்பினும், ஹுஸுர் (அலை) அவர்கள் ஸியால்கோட்டில் தங்கியிருந்த காலத்தின் தூய்மையான நினைவுகளை எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அவரால் மறக்க முடியவில்லை.

அவர் எழுதுகிறார்: 'நம்பகமான தோற்றம் கொண்டவர்; அதாவது ஒரு கண்ணியமான தோற்றமும், தாடியும் கொண்ட ஆளுமை. உயர்ந்த தைரியமும், உயர்ந்த சிந்தனைகளும் கொண்ட ஒரு மனிதர்; தமது மன உறுதியின் முன்னால் யாரையும் ஒரு பொருட்டாகக் கருதமாட்டாரோ என்று தோன்றும்! அவர் உள்ளே நுழைந்தவுடன் உளூ செய்வதற்காகத் தண்ணீர் கேட்டார்.

இந்த சம்பவத்தை அவர் எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்.

அங்கு அவர் எந்த அறைக்குள் நுழைந்தாரோ, அங்கு உளூ செய்து முடித்ததும் மஹ்ரிப் தொழுகையை நிறைவேற்றினார். (ஹயாத்தே அஹ்மத், தொகுதி 1, பக்கம் 158) அதன் பிறகு மீண்டும் அவர் இறை தியானமும் செய்தார்.

பின்னர், புகழ்பெற்ற முஸ்லிம் தலைவர் மௌலவி ஜாஃபர் அலி கான் ஸாஹிபின் தந்தையும், 'ஜமீன்தார்' பத்திரிகையின் ஆசிரியருமான மறைந்த முன்ஷி சிராஜுத்தீன் ஸாஹிப் கூறுகின்றார்:

மிர்ஸா குலாம் அஹ்மது ஸாஹிப் 1860 அல்லது 1861-ம் ஆண்டு வாக்கில் ஸியால்கோட் மாவட்டத்திற்கு அருகாமையில் எழுத்தாளராக இருந்தார்கள். அந்த நேரத்தில் அன்னாருக்கு இருபத்திரண்டு முதல் இருபத்தி நான்கு வயது இருக்கும்.'

நாங்கள் நேரில் கண்ட சாட்சியத்தின் அடிப்படையில் கூற முடியும், அவர்கள் இளமையிலும் கூட மிகவும் நேர்மையான மற்றும் இறையச்சம் கொண்ட சான்றோராக இருந்தார்கள். வேலை மற்றும் பணிக்கு பிறகு அவர்களின் முழு நேரமும் மார்க்க நூல்களைப் படிப்பதிலேயே செலவானது. அவர்கள் பொதுமக்களுடன் மிகக் குறைவாகவே பழகுவார்கள். (ஹயாத்தே அஹ்மத், பாகம் 1, பக்கம் 374)

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

ஒருமுறை ஹஸ்ரத் ஷேக் யாகூப் அலி ஸாஹிப் இர்ஃபானீ (ரலி) அவர்கள் ஸியால்கோட்டில் ஸய்யித் மீர் ஹஸன் ஸாஹிப்பைச் சந்தித்தார்கள். நான் முந்தைய குத்பாவில் இவரைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அப்போது ஸய்யிது மீர் ஹஸன் அவர்கள் கண்கள் பனிக்க, மிகவும் உருக்கமாகக் கூறினார்கள்:

வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், நாம் அன்னாரைச் சரியாக மதிப்பிடவில்லை. அன்னாரின் ஆன்மீகச் சிறப்புகளை எடுத்துரைக்க இயலாது. அன்னாரின் வாழ்க்கை ஒரு சாதாரண மனிதனின் வாழ்க்கையாக இருக்கவில்லை. மாறாக, அன்னார் (அலை) இறைவனின் அந்தச் சிறப்பான அடியார்களில் ஒருவராக இருந்தார்கள், அத்தகையவர்கள் உலகில் எப்போதாவதுதான் தோன்றுவார்கள்.'

(தாரிக்கே அஹ்மதிய்யத், பாகம் 1, பக்கம் 95; அல்-ஹகம் பாகம் 37, எண் 12, தேதி 7 ஏப்ரல் 1934, பக்கம் 3, நெடுவரிசை 3)

இன்னொரு சம்பவமும் இருக்கின்றது; அது ஒரு சாதாரண நபருடையதாகும். அந்த கிராமத்து மனிதர் எவ்வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஒளியை அடையாளம் கண்டுகொண்டார் என்பது பற்றிய சம்பவம் ஆகும் அது.

இந்த ஒளி, அல்லாஹ்வை நேசிப்பவர்கள் மற்றும் அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் முகங்களில் பிரகாசிக்கும். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள்:

எனது தாயார் ஸாஹிபா (ரலி) அவர்கள், தம்மிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறியதாக அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை ஒரு வழக்கு நிமித்தமாக டல்ஹவ்ஸி மலையில் சென்று கொண்டிருந்தேன். வழியில் மழை வந்து விட்டது. நானும், என் தோழரும் வாகனத்திலிருந்து இறங்கி, வழியில் இருந்த ஒரு மலைவாழ் மனிதரின் வீட்டை நோக்கிச் சென்றோம். என் தோழர் முன்னால் சென்று, வீட்டு உரிமையாளரிடம் உள்ளே வர அனுமதி கேட்டார், ஆனால் அவர் தடுத்து விட்டார். இது ஒரு சிறிய அறையாக இருந்தது; பாவம் ; ஏழைகளுடையது இப்படித்தான் இருக்கும்.

இதனால் அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. வீட்டு உரிமையாளர் கோபமடைந்து வசவு சொற்களைக் கூறத் தொடங்கினார்.

நான் உள்ளே வர வேண்டுமென்று அன்னார் (ரலி) சொன்னபோது, அவர் கூறினார்: நானோ உள்ளே அனுமதிக்க மாட்டேன்;

ஆக, வாக்குவாதம் ஆகிவிட்டது. ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) கூறினார்கள்:

நான் வாக்குவாதத்தைக் கேட்டு முன்னால் சென்றேன். எனது கண்ணும், வீட்டு உரிமையாளரின் கண்ணும் சந்தித்தபோது, நான் ஏதேனும் சொல்வதற்கு முன்பே அவர் தன் தலையைக் குனிந்துகொண்டு, உண்மையில் விஷயம் என்னவென்றால், எனக்கு ஓர் இளம் மகள் இருக்கிறாள்; அதனால்தான் அந்நிய ஆட்களை வீட்டிற்குள் நுழைய விடுவதில்லை; ஆனால் தாங்கள் தாராளமாக உள்ளே வரலாம் என்றார்.

ஹஸ்ரத் ஸாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: அவர் ஒரு அந்நிய நபராக இருந்தார்; அவர் என்னை அறிந்திருக்கவில்லை, நானும் அவரை அறிந்திருக்கவில்லை. (ஸீரத்துல் மஹ்தி, பாகம் 1, பக்கம் 6, அறிவிப்பு எண் 8)

ஆக, உண்மையில், இது தெய்வீக ஒளியாகும். அன்னாரின் முகத்திலிருந்து அவருக்கும் தென்பட்ட கண்ணியம் மற்றும் இறை வணக்கத்தின் அடையாளமாக இது இருந்தது.

மேலும், சரி! தாங்கள் உள்ளே வரலாம் என்று அவர் கூறிவிட்டார்.

வல்ல இறைவனின் இருப்பு எப்போதும் அன்னாரின் கண்முன் இருந்து வந்தது. எந்தவொரு வேலையோ அல்லது ஈடுபாடோ அன்னாரை இறைவனின் நினைவிலிருந்து தூரமாக்கவில்லை.

எனவே, வழக்குகளின் போது கூட இதே முன்மாதிரியை நாங்கள் கண்டிருக்கின்றோம். நான் முன்னரும் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டிருந்தேன். ஒரு வழக்கு நடந்து கொண்டிருக்கும் அபாயமான நேரத்தின்போது, தொழுகைக்கான ஏற்பாடு செய்வது ஒரு கடினமான காரியமாகும். ஆனால் அல்லாஹ்வின் அன்பில் அன்னார் (அலை) எந்த அளவிற்கு முழுமையான நம்பிக்கை கொண்டவராகவும், தன்னிறைவு பெற்றவராகவும் இருந்தார்கள் என்றால், நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருந்தாலும், எப்போது வேண்டுமானாலும் அழைக்கப்படலாம் என்ற நிலை இருந்தாலும், தொழுகைக்கான நேரம் வந்தவுடன், அன்னார் (அலை) நீதிமன்றத்தின் அழைப்பைக் கைவிட்டு விட்டு, ஆஜராகாமல் இருந்தால் ஏற்படும் இழப்புகளைப் பொருட்படுத்தாமல், இறைவனின் அழைப்பிற்குப் பதிலளிக்கும் விதமாக அவனது சன்னிதானத்தில் (அதாவது தொழுகையில்) ஆஜராகி விடுவார்கள். (ஸீரத்துல் மஹ்தி, பாகம் 1, பக்கம் 14, அறிவிப்பு எண் 17)

ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டிய அசல் விஷயம் என்னவென்றால், தொழுகைக்கான நேரத்தில் தொழுகைக்கு எல்லா நிலையிலும் முன்னுரிமை அளிக்க வேண்டும். இது எத்தகைய முன்மாதிரி என்றால், இது ஒரு நம்பிக்கையாளரின் தனிச்சிறப்பாகும். அன்னார் (அலை) தமது எஜமானரிடமிருந்து இதைக் கற்றுக்கொண்டு, அதன்படி செயல்பட்டார்கள்; மேலும், நமக்கு முன்னால் இந்த முன்மாதிரியை வைத்துள்ளார்கள்.

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி ஸாஹிப் இர்பானீ (ரலி) அவர்கள் அன்னாரின் இந்த நிலையை மிக அழகான முறையில் எடுத்துரைத்துள்ளார்கள். எழுதுகின்றார்கள்:

இந்த வழக்குகளின் தொடர் மிகவும் நீளமானது மற்றும் சில வழக்குகளில் ஆஜராக அன்னாருக்கு சீஃப் கோர்ட் (உயர் நீதிமன்றம்) வரை செல்ல வேண்டியிருந்தது.

எழுதுகின்றார்கள்: இந்த வாழ்க்கை வரலாற்றைப் படிப்பவர்களுக்கு, ஹஸ்ரத் மிர்ஸா ஸாஹிபின் வாழ்க்கையின் அந்தப் பகுதியை நான் அறிமுகப்படுத்தயவாறு நான் எந்த விவகாரத்தின் பக்கம் கவனமூட்ட விரும்புகின்றேன் என்றால், அது அல்லாஹ்வுடன் அன்னாருக்கு இருந்த தொடர்பைப் பற்றியதாகும்.

ஹஸ்ரத் ஸாஹிபின் தோழமையில் இருப்பதற்கும், அன்னாரின் பேச்சைக் கேட்பதற்கும் எந்த நபர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளதோ அல்லது எவர்கள் ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட உரைகளைப் படித்துள்ளார்களோ, அவர்கள் இதனை அறிவர். அதாவது, மிர்ஸா ஸாஹிப் எப்போதும் 'தஸ்த் பகார் அவர் தில் பஃ யார். (கை வேலையில் இருந்தாலும், இதயம் இறைவனிடம்) என்ற நிலையில் இருந்ததை அவர்கள் அறிவர்.

அதாவது கைகள் வேலையிலும், இதயம் அன்பனிடமும் அதாவது இறைவனின் நினைவில் மூழ்கியிருக்கும். மேலும் அன்னார் (அலை) இதற்கான வழிகாட்டல்களையும் வழங்கி வந்தார்கள். நீதிமன்ற வழக்குகளில் பொதுவாக இரு தரப்பினரும் இவ்வாறே காணப்பட்டுள்ளனர். அதாவது, அவர் வாதியாக

இருந்தாலும் அல்லது பிரதிவாதியாக இருந்தாலும் அந்த நபர்கள் கவலையிலும், அமைதியற்ற நிலையிலும் இருப்பர். ஆனால், மிர்ஸா ஸாஹிப் அவர்கள் வழக்குகளுக்காகச் செல்லும்போது, அன்னாரது இயல்பில் எந்தவொரு பதற்றமோ அல்லது படபடப்போ இருந்ததில்லை. மாறாக, முழுமையான மன உறுதி மற்றும் கண்ணியத்துடன் உள்ளத்தால் இறைவனின் நினைவில் மூழ்கியிருப்பார்கள்.

இந்த வழக்குகளை பின்தொடர்ந்து வந்தது என்பது எங்கு தமது தந்தைக்கு கட்டுப்படுதல் என்றக் கடமையை நிறைவேற்றுவதற்காக மட்டுமானதாகவே இருந்ததோ அங்கு இந்த வழக்குகளின் போது அன்னார் (அலை) ஒருபோதும் தொழுகையைத் தவறவிட்டதில்லை. மேலும் இவ்வாறு அல்லாஹ்வின் உரிமைகள் தொடர்பான அந்தக் கடமைகளில் இருந்து அன்னார் (அலை) அலட்சியமாக இருந்ததில்லை. நீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு நடுவே தொழுகை நேரம் வந்துவிட்டால், அன்னாருக்கு வேறு எந்த வேலையும் இல்லாதது போல அதே முனைப்புடன் அன்னார் (அலை) தொழுகையில் ஈடுபட்டு விடுவார்கள்.

அடுத்து, பல சம்பவங்களையும் அவர்கள் எழுதியுள்ளார்கள். சில நேரங்களில் எவ்வாறு நிகழ்ந்தது என்றால், நீதிமன்றங்களில் கூச்சல்கள் எழுந்தன. ஆனால், அன்னார் (அலை) அவற்றைப் பொருட்படுத்தாமல் இருந்தார்கள்.

அடுத்து அவர்கள் எழுதுகின்றார்கள்: இந்த வழக்குகளுக்கான பயணங்களிலும், ஒவ்வொரு நொடியும் அன்னாரது கவனம் அகிலத்தைப் படைத்துப் பரிபாலிக்கும் அந்த இறைவனின் மீதே இருந்தது. உதிக்கும் சூரியனிலும், இரவில் வானில் ஒளிரும் நிலவு மற்றும் நட்சத்திரங்களிலும், உயரத்திலிருந்து விழும் அருவிகளிலும், உயர்ந்த மலைகளிலும், ஓடும் நதிகளிலும், ஆடும் வயல்களிலும், பறவைகளின் கீதங்களிலும் மற்றும் இடி, மின்னல்களின் சத்தங்களிலும் அன்னாருக்கு அந்த ஏக இறைவனின் பிரதிபலிப்பே தென்பட்டது. ஒளிகளின் பிறப்பிடமான அந்த ஏக இறைவனின் பிரதிபலிப்பு அன்னாருக்கு தென்பட்டது.

அதாவது ஒவ்வொரு பொருளிலும் அன்னாருக்கு அல்லாஹ்வின் வல்லமையையே தென்பட்டு வந்தது. எல்லாப் பக்கங்களிலும் அந்த உண்மையான நேசனின் தரிசனமே அன்னாருக்கு காணக் கிடைத்தது. அவர் சந்திரனைக் கண்டு பரிதவிக்கின்றார். ஏனெனில், அதிலும் அழகிய நேசனின் சில சில அடையாளங்கள் தென்படுகின்றன.

கதிரவனின் ஊற்றில் அவனது அலைகள் கண்கூடாகத் தெரிகின்றன, ஒவ்வொரு நட்சத்திரத்திலும், அவனது பிரகாசத்தின் காட்சி தெரிகிறது. அழகானவர்களின் முகங்களில் உள்ள வசீகரம் அந்த உண்மையான படைப்பாளனின் அழகையே பறைசாற்றுகிறது. ஒவ்வோர் அழகான கண்ணும் அவனையே காட்டுகிறது, ஒவ்வொரு சுருள் கூந்தலும் அந்த ஏக இறைவனின் கைவண்ணத்தையே சுட்டிக்காட்டுகிறது. ஒவ்வொரு மலரும், தோட்டமும் அவனது அழகு மற்றும் உபகாரத்தின் வாசனையால் நறுமணமடைகின்றது.

அன்னார் (அலை) மிக அழகாக எடுத்துரைத்துள்ளார்கள். கூறுகின்றார்கள்:

உண்மை இதுவாகும். அதாவது, அன்னார் (அலை) அந்த வழக்குகளுக்காக சென்று கொண்டிருந்தார்கள் என்றோ கூறப்படுகின்றது. ஆனால், உண்மையில் அந்தப் பயணங்களின் போது அந்நியர்கள் அளித்த அனைத்து துயரச் சச்சரவுகளும் நீங்கிக் கொண்டிருந்தன.

இந்த நிலையைப் பற்றி அன்னார் (அலை) எழுதியுள்ளார்கள்; உதாரணமாக, நான் ஏற்கனவே டல்ஹௌசி (Dalhousie) பயணத்தைப் பற்றி எடுத்துரைத்திருந்தேன். அங்கும் அன்னார் (அலை) சாலையின் காட்சிகளைப் பார்த்துவிட்டு, இந்தத் தண்ணீரின் அருவிகளும், மலைகளின் பசுமையான பகுதிகளும் எவ்வளவு அழகாக இருக்கின்றன என்றே கூறினார்கள்.

எனவே, அதே ஏக இறைவனின் இருப்பில் மாய்த்துக் கொள்ளுதல் மற்றும் திருப்தியின் தன்மை அன்னாருக்குள் குடி கொண்டிருந்தன. பகலாக இருந்தாலும் சரி! இரவாக இருந்தாலும் சரி! தனிமையில் இருந்தாலும் சரி! அல்லது கூட்டத்தில் இருந்தாலும் சரி! அந்த உண்மையான காதலனின் (இறைவனின்) நினைவு ஒருபோதும் இதயத்திலிருந்து நீங்கியதில்லை. (ஹயாத்தே அஹ்மது, பாகம் 1, பக்கம் 85 முதல் 87 மற்றும் ஸீரத்தே அஹ்மது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனது தாயார் என்னிடம் ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இவ்வாறு கூறியதாகக் குறிப்பிட்டார்கள்:

எனக்கு அல்லாஹ்விடமிருந்து தெரிய வந்துள்ளது அல்லது அல்லாஹ்விடமிருந்து எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது:

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللهِ الْعَظِيْمِ

என்பதை அதிகம் ஓத வேண்டும் என்று அல்லாஹ்வின் புறமிருந்து கூறப்பட்டுள்ளது.

தாயார் ஸாஹிபா அவர்கள் கூறுகின்றார்கள்: இதன் காரணமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இதை மிக அதிகமாக ஓதி வந்தார்கள். இரவு படுக்கையில் புரண்டு படுக்கும் போது கூட இதே வார்த்தைகள் அன்னார் (அலை) நாவிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கும்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: 'நான் இந்த அறிவிப்பை மௌலவி ஷேர் அலி (ரலி) அவர்களிடம் கூறியபோது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் سُبْحَانَ اللهِ என்று மிக அதிகமாக ஓதிக் கொண்டிருப்பதை நானும் பார்த்திருக்கிறேன் என்று அவர்கள் கூறினார்கள்.

மேலும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் தமது சொந்த சாட்சியத்தையும் கூறுகின்றார்கள்:

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள், سُبْحَانَ اللهِ என்று ஓதுவதை கேட்டிருக்கிறேன். அன்னார் (அலை) மிகவும் மெதுவாகவும், நிதானமாகவும், அமைதியுடனும், மென்மையுடனும் இந்த வார்த்தைகளை நாவால் உச்சரித்துக் கொண்டிருப்பார்கள். இத்துடன் அன்னார் (அலை) ஒருவகையில் இறைப் பண்புகளின் மீதும் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டு சென்றார்கள். (ஸீரத்துல் மஹ்தி, பாகம் 1, பகுதி 1, பக்கம் 3 அறிவிப்பு 1)

பின்னர் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதியதாவது:

பீர் ஸிராஜுல் ஹக் ஸாஹிப் நுஃமானி என்னிடம் கூறினார்கள்:

ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்களின் தூக்கத்தின் நிலை எவ்வாறிருந்தது என்றால், சிறிது நேர இடைவெளிக்குப்பிறகு அன்னார் (அலை) விழித்துக் கொள்வார்கள். மெல்ல மெல்ல ' سُبْحَانَ اللهِ سُبْحَانَ اللهِ என்று கூறத் தொடங்கிவிடுவார்கள், பிறகு மீண்டும் தூங்கிவிடுவார்கள். (ஸீரத்துல் மஹ்தி, பாகம் 1, பகுதி 2, பக்கம் 287)

ஹஸ்ரத் ஷேக் யஃகூப் அலி ஸாஹிப் இர்பானீ (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு, தமது எஜமானரும், புனிதருமான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுதலின் வழிமுறையில் தனிமை மற்றும் ஒதுங்கியிருப்பது மிகவும் விருப்பத்திற்குரியதாக இருந்தது. அன்னாரின் விருப்பப்படி இருந்திருந்தால், அன்னார் (அலை) ஒருபோதும் வெளியே வந்திருக்க மாட்டார்கள். பலமுறை அன்னார் (அலை) தமது சொற்பொழிவுகளிலும், எழுத்துக்களிலும் இதனை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

சுருக்கமாக, அன்னாரின் தனிமையை விரும்பும் குணம், மென்மையான சுபாவம் மற்றும் இயற்கையிலேயே அமைதியை விரும்பும் பண்பு ஆகியவற்றின் மீது ஒரு வலுவான தாக்கம் ஏற்பட்டபோது, மேலும் அன்னார் (அலை) முற்றிலும் அல்லாஹ்வின் பக்கம் ஈர்க்கப்பட்டபோது, அன்னார் (அலை) தமது தந்தையாருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தைப் படித்தால், ஹஸ்ரத் (அலை) அவர்கள் ஆரம்ப வயது முதலே இந்த உலகத்தின் மீது பற்றற்றவர்களாகவும், அல்லாஹ்வுடனான தமது தொடர்பை வலுப்படுத்துவதில் அக்கறை கொண்டவர்களாகவும் இருந்தார்கள் என்பது தெரியவருகின்றது.

இளமைப் பருவத்தில் எழுதப்பட்ட இந்தக் கடிதமும் அன்னாரின் தூய்மையான மற்றும் பரிசுத்தமான வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியாகும். பாரசீக மொழியில் இந்தக் கடிதம் உள்ளது. அதன் ஒரு பகுதியை நான் இங்கே எடுத்துரைத்து விடுகின்றேன்: அன்னார் (அலை) தமது தந்தையை விளித்து எழுதினார்கள்:

இந்த நாட்களில் நான் எனது கண்களால் பார்க்கிறேன். மேலும் ஆழ்ந்த சிந்தனையுடன் கவனித்துக் கொண்டிருக்கிறேன்,



ஒவ்வோர் ஆண்டும் எல்லா நாடுகளிலும், நகரங்களிலும் ஏதாவது ஒரு கொள்ளைநோய் வந்து விடுகின்றது. அது நண்பர்களை நண்பர்களிடமிருந்தும், உறவினர்களை உறவினர்களிடமிருந்தும் பிரித்துவிடுகிறது. எந்தவோர் ஆண்டும் இந்தப் பற்றி எரியும் நெருப்பும், இந்த துயரம் மிகு நிகழ்வுகளும் பேரழிவை ஏற்படுத்தாமல் இருப்பதில்லை. இந்த நிலைமைகளைப் பார்த்து இதயம் உலகத்தின் மீது சலிப்படைந்துவிட்டது, முகம் அச்சத்தால் மஞ்சள் நிறமாகிவிட்டது.

இன்றைய நாட்களில் உலகின் நிலைமைகள் எப்படி இருக்கின்றனவோ, அவ்வாறே அவை நமக்கு நினைவுபடுத்துகின்றன. எல்லாப் பக்கமும் எவ்வாறு நெருப்பு எரிந்து கொண்டிருக்கிறது? என்பதை நாம் காண்கிறோம். எனவே நாம் முடிந்தவரை அல்லாஹ்வுடன் அதிக தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அன்னார் (அலை) இந்தக் கடிதத்தில் எழுதினார்கள்:

ஷேக் முஸ்லிஹூத்தீன் சஅதி ஷிராஸி அவர்களின் இந்த இரண்டு வரிகள் நினைவிற்கு வருகின்றன. மேலும், ஏக்கத்தில் அன்னாரின் கண்கள் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கின்றன.

மகுன் தகிய்யா பர் உம்ரே நா பாயிதார் - மபாஷ் அய்மன் அஸ் பாஸியே ரோஸ்கார்.

பொருள்: இந்த நிலையற்ற வாழ்வை ஒருபோதும் நம்பாதே; இந்த காலத்தின் விளையாட்டுகளில் உன்னை பாதுகாப்பாகக் கருதிவிடாதே! நாம் உலகியல் பணிகளில் ஈடுபட்டு விட்டால் நாம் பாதுகாப்பாகி விடுவோம் என்று கருதாதீர்கள்.

பிறகு அன்னார் (அலை) எழுதினார்கள்: மேலும் ஃபருக் காதியானியின் இந்த இரண்டு வரிகள் - அதாவது அந்த காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் 'ஃபருக்' என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதினார்கள் - அன்னாரின் கவிதைத் தொகுப்பில் உள்ள பின்வரும் வரிகள் இதயத்தின் காயங்களில் உப்பைப் பூசுவது போல் அமைகின்றன: ப துனியாயே தூன் தில் மபன்த் ஏ ஜவான் - கே வக்தே அஜல் மீ ரஸத் நா கஹான். பொருள்:

ஓ! இளைஞனே! இந்த தாழ்ந்த உலகில் உன் இதயத்தைப் பதிக்காதே!

ஏனெனில் மரண நேரம் திடீரென்று வந்துவிடும்!

அதாவது,ஓ! இளைஞனே! இந்த அற்பமான உலகத்தின் மீது நீ அன்பு கொள்ளாதே! ஏனெனில் மரணம் எப்போது வேண்டுமானாலும் வரலாம். எஞ்சிய வாழ்நாளை தனிமையில் கழிக்கவும், தீயவர்களின் நட்பிலிருந்து விலகி தூய அல்லாஹ்வின் நினைவில் மூழ்கி இருக்கவும் நான் விரும்புகிறேன். இதன் மூலம் கடந்த கால தவறுகளுக்கு மன்னிப்புத் தேடி, இழந்ததை ஈடுசெய்ய முடியும்.

இந்தக் கடிதத்திலிருந்து தெரியவருவது என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் புகழ் அல்லது பெருமையைத் தேடுபவராக இருக்கவில்லை, மாறாக, இறைவனுடன் தூய்மையான தொடர்பைக் கொண்டிருந்தார்கள். அன்னார் (அலை) தனிமையையும், விலகி இருப்பதையும் எவ்வளவு நேசித்தார்கள் என்றால், இறைவனின் கட்டளையின்படி செயல்பட வேண்டும் என்பதை கருத்தில் கொள்ளாமல் இருந்திருந்தால், அன்னார் (அலை) ஒருபோதும் பொதுவாழ்விற்கு வந்திருக்க மாட்டார்கள் என்பது ஓர் உண்மை நிலையாகும்.

அன்னார் (அலை) இவ்வாறு கூறினார்கள்:

தனிமை அல்லது பொதுவாழ்வு ஆகிய இரண்டில் நீ எதனை விரும்புகின்றாய்? என்று அந்த அதிகாரத்தை அல்லாஹ் எனக்கு வழங்கினால், அந்தப் பரிசுத்தமான இறைவன் மீது ஆணையாக! நான் தனிமையையே தேர்ந்தெடுப்பேன். அவன் தான் என்னை இந்தச் செயல் களத்திற்கு இழுத்துக் கொண்டு வந்தான். தனிமையில் எனக்குக் கிடைக்கும் இன்பத்தை இறைவன் ஒருவனைத் தவிர யார் அறிவார்? நான் சுமார் 25 ஆண்டுகள் தனிமையில் அமர்ந்திருந்தேன், ஒரு கணம் கூட நான் புகழின் சிம்மாசனத்தில் அமர வேண்டும் என்று ஒருபோதும் விரும்பியதில்லை. மக்களுடன் கலந்து பழகுவதை நான் இயல்பாகவே வெறுக்கிறேன், ஆனால் இறைக் கட்டளைக்குக் கட்டுப்பட்டு நான் இதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன். (ஹயாத்தே அஹ்மது, தொகுதி 1, பக்கம் 111 முதல் 115 வரை, அடிக்குறிப்புடன்)

இவ்வாறு தமது தந்தைக்குக் கடிதம் எழுதி அன்னார் (அலை) தமது அனைத்தையும் விட்டுவிட்டார்கள். சொல்லப்போனால், அன்னார் (அலை) கைவிட்ட அந்த வாழ்க்கை என்பது ஒரு வகையான இளவரச வாழ்க்கையாக இருந்தது. அன்னாரின் தந்தையின் சொத்தில் ஏழு கிராமங்கள் இருந்தன. (தாரிக்கே அஹ்மதிய்யத், தொகுதி 1, பக்கம் 42)

இவை அனைத்தையும் அன்னார் (அலை) இறைவன் மீதான அன்பிற்காக மட்டுமே துறந்தார்கள்!

அன்னார் (அலை) தம்மைப் பின்பற்றுபவர்களுக்கும் சில முறை இது குறித்து அறிவுரை வழங்கி வந்தார்கள். அதன்படி ஒரு நிகழ்வில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

மியான் மூஸா கான் ஸாஹிப் (ரலி) கூறுகின்றார்கள்:

ஒருமுறை நான் காதியானுக்குச் சென்றிருந்தபோது, அங்கோ ஒரு 'புதிய முஸ்லிம்' நபர் இருந்தார். அவர் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் சமூகத்தில், ஹுஸூர்! எனக்கு அனுமதி தாருங்கள்; அறுவடை தயாராக உள்ளது.

அவர் ஒரு பெரிய நிலக்கிழாராக இருந்தார்.

நான் விளைச்சலைப் பங்கீடு செய்ய வேண்டியுள்ளது, விவசாயிகள் அதற்காகக் காத்திருக்கின்றனர் என்று முறையிட்டார்.

அன்னார் (அலை) அவரிடம், எவ்வளவு அறுவடை இருக்கிறது? என்று கேட்டார்கள். அதற்கு, ஹுஸூர்! மிக அதிகமாக இருக்கிறது' என்று அவர் பதிலளித்தார். அன்னார் (அலை) கூறினார்கள்: 'நானோ பல கிராமங்களை விட்டுவிட்டு இறைவனின் வாசலைத் தேர்ந்தெடுத்துள்ளேன். நீங்கள் இன்னும் சில நாட்கள் இங்கே தங்குங்கள்.'

(அறிவிப்பு, அஸ்ஹாபே அஹ்மது, தொகுதி 4, பக்கம் 424)

' அன்னார் (அலை) கூறினார்கள்: உங்களது ஆன்மீக நிலையை மேம்படுத்துங்கள்; உலக விவகாரங்களை அல்லாஹ்விடம் விட்டுவிடுங்கள்; இறைவன் அருள் புரிவான்.

அவரின் சூழ்நிலையை அன்னார் (அலை) அறிந்திருப்பார்கள்.

ஆக, எவ்வாறிருப்பினும், அங்கு அப்போது இதனைக் கூறினார்கள். ஆனால். அன்னார் (அலை) மற்றோர் இடத்தில், 'உலக விவகாரங்களை முற்றிலும் கைவிடக் கூடாது; இறைவன் வழங்கிய அருட்கொடைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்கள்.

(மல்ஃபூஸாத், தொகுதி 10, பக்கம் 220- பதிப்பு 2022)

எப்படியிருப்பினும், அந்தப் புதிய முஸ்லிமின் தர்பியத்திற்காக அன்னார் (அலை) அவருக்கு இந்த ஆலோசனையை வழங்கினார்கள். இது சூழ்நிலையைப் பொறுத்தது. ஒவ்வொருவரும் தங்களின் நிலையை பார்த்துக் கொள்ள வேண்டும். முற்றிலும் மூழ்கி விடும் அளவிற்கு உலகியல் விவகாரங்களில் ஈடுபடவும் கூடாது; அதே சமயம் உலகிற்கு செலுத்த வேண்டிய உரிமைகளை நிறைவேற்றாமல் முற்றிலும் துறவறம் மேற்கொண்டு விடவும் கூடாது.

அவர் இஸ்லாத்தின் இந்த வழியைப் பின்பற்ற வேண்டும். ஆனால் ஒரு விஷயத்தை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும், அதாவது அல்லாஹ்வை ஒருபோதும் விட்டுவிடக் கூடாது. இந்த அம்சத்தில் எப்போதும் மிகுந்த

**இதன் தொடர்ச்சி** 12-ம் பக்கம்..

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறை நேசம் குறித்த மனம் கவர் கோணத்தில் நற்குறிப்புகள்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 06 பிப்ரவரி 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **தப்லீஃக் மாதம் 06 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி....**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதன் விளக்கவுரையில் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த நஃபில் தொழுகைகளில் எவ்வளவு கவனம் இருந்தது என்றால், இது அவர்களின் நஃபில் வணக்கமாக இருந்தபோதிலும், அன்னார் (ஸல்) இரவில் எழுந்து, ஸஹாபிகளில் யார் இந்த நஃபிலை தொழுகின்றார்? என்று சுற்றிவந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அதாவது, நகரின் தெருக்களில் அன்னார் (ஸல்) சுற்றி வரும்போது, எங்கு தொழுகைக்கான சத்தம் வருகின்றது? தஹஜ்ஜுத் நேரத்தில் யார் விழித்திருக்கின்றார்கள்? யார் தொழவில்லை என்பது தெரிந்து விடும்.

யார் தஹஜ்ஜுத் தொழுகிறார்கள்? யார் தொழவில்லை? என்றும் அன்னார் (ஸல்) ஆய்வு செய்து வந்தார்கள்.

இன்று ஒருவரிடம் தொழுகையைப் பற்றி கேட்டால் அல்லது மஸ்ஜிதிற்கு வரச் சொன்னால், 'நீங்கள் எத்தனை முறை மஸ்ஜிதிற்கு வருகிறீர்கள்?' என்று கேட்டால், மக்கள் உடனே ஆட்சேபிக்கத் தொடங்குகிறார்கள். மேலும், இது எங்கள் தனிப்பட்ட விஷயம்; நீங்கள் யார் கேட்பதற்கு? ஜமாஅத் கேட்பதன் அவசியம் என்ன? இது எனக்கும், அல்லாஹ்வுக்கும் இடையிலான விஷயம் என்று கூறுகின்றனர். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுகையைக் கூடக் கண்காணித்து வந்தார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சபையில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களைப் பற்றிப் பேச்சு வந்தது. அவர் மிகவும் நல்லவர்; அவரிடம் இன்னின்ன நற்பண்புகள் உள்ளன என்று கூறப்பட்டது. அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்: 'ஆம்! அவர் தஹஜ்ஜுத் தொழுதால் இன்னும் மிகச் சிறந்த மனிதராக இருப்பார்' என்று கூறினார்கள். ஏனெனில் அவர் இளைஞராக இருந்தார், தஹஜ்ஜுத் விஷயத்தில் சற்று சோம்பலாக இருந்தார், எனவே நபி (ஸல்) அவர்கள் அவரை இந்த விதத்தில் தூண்டினார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ் அந்த கணவன் மற்றும் மனைவி மீது கருணை காட்டுவானாக! கணவன் இரவில் எழுந்து தஹஜ்ஜுத் தொழுது, தன் மனைவியையும் எழுப்பட்டும்; அவள் எழவில்லை என்றால், பின்னர் அவள் முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்பட்டும். அதேபோன்று மனைவி இரவில் எழுந்து தஹஜ்ஜுத் தொழட்டும்; மேலும் தம் கணவரை எழுப்பட்டும்; அவர் எழவில்லை என்றால், அவர் முகத்தில் தண்ணீர் தெளிக்கட்டும்.'

பாருங்கள்! ஒருபுறம் கணவருக்கு மனைவி மரியாதை செலுத்துவதை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகவும் அவசியமானதாக ஆக்கியுள்ளார்கள். மறுபுறம், தஹஜ்ஜுத் தொழுகைக்காக எழுப்புவதற்காக முகத்தில் தண்ணீர் தெளிக்க நேரிட்டாலும் அதனையும் அன்னார் (ஸல்) அனுமதித்துள்ளார்கள்.

ஆக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தஹஜ்ஜுத் தொழுகையை இந்த அளவு அவசியமானதாகக் கருதி வந்தார்கள்.

இரவில் (தொழுகைக்காக) எழுவது ஆன்மாவை சீர்படுத்துகின்றது என்று திருக்குர்ஆன் கூறுகிறது. இதனால்தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம், 'இரண்டே ரக்அத்துகள் ஆனாலும் சரி! தஹஜ்ஜுத் கண்டிப்பாக தொழுங்கள்' என்று கூறினார்கள்.

அடுத்து, இரவின் கடைசிப் பகுதியில் அல்லாஹ் நெருங்கி வந்து விடுகின்றான் ; மேலும், மிக அதிக அளவில் துஆக்களை ஒப்புக் கொள்கிறான் என்று ஹதீஸ்களில் இருந்து நிரூபணமாகியுள்ளது. எனவே, தஹஜ்ஜுத் தொழுவது மிகவும் அவசியமானது மற்றும் மிகவும் பலன் தரக்கூடியதாகும்.

(ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் நூல்-அஸ் ஸீரத்துன்-நபி (ஸல்), பாகம் 1, பக்கம் 416-417)

அல்லாஹ்வின் அருளினால் மட்டுமே மனிதனுக்கு ஈடேற்றம் கிடைக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எந்தவொரு மனிதனும் தனது செயல்களை மட்டும் ஆதாரமாகக் கொண்டு, தான் இரட்சிப்பு பெற்றுவிடுவேன் என்று வாதம் செய்ய முடியாது. ஏனெனில், மற்ற அனைவரையும் விட மிகச்சிறந்த முறையில் நற்செயல்கள் புரிந்தவர் மற்றும் இறைவனுக்கு மிகவும் கீழ்ப்படிந்தவர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களே ஆவார்கள். ஹதீஸில் வருவதைப் போன்று, அன்னார் (ஸல்) கூட தமது நற்செயல்களின் மீது நம்பிக்கை வைக்கவில்லை. கடந்த குத்பாவில் நான் எடுத்துரைத்திருந்தேன். அதாவது, ஹதீஸில் இவ்வாறு வந்துள்ளது:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமும் மற்ற ஸஹாபிகளிடமும் இவ்வாறே கூறினார்கள். அப்போது, 'இறைத்தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் தங்களது நற்செயல்களால் சொர்க்கம் செல்வீர்கள் அல்லவா?' என்று அவர்கள் கேட்டபோது, அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஆயிஷாவே! இல்லை! நானும் அல்லாஹ்வின் அருளினால் மட்டுமே சொர்க்கம் செல்வேன்.

எனவே ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் போன்ற ஒரு மனிதருடைய ஒவ்வொரு சுவாசமும், நடப்பதும், அமர்வதும் இறை வணக்கத்தில் அடங்கியிருந்தது. அன்னாருடைய தூக்கமும், விழிப்பும் இறை வணக்கமாக கணக்கிடப்பட்டது. அன்னாருடைய ஒவ்வோர் அசைவும், அமைதியும் இறை வணக்கமாக இருந்தது; எந்த அளவுக்கெனில், அவர் இயற்கை உபாதைகளை கழிக்கச் செல்வதும், மனைவிமார்களிடம் சென்றதும் கூட இறை வணக்கமாக இருந்தது.

இத்தகைய மாபெரும் பெரிய அடியாரான ஒரு மனிதர், 'நான் எனது செயல்களால் சொர்க்கம் செல்ல மாட்டேன்; மாறாக, அல்லாஹ்வின் அருளாலேயே செல்வேன்' என்று கூறும்போது, எனது செயல்களைக் கொண்டு நான் சொர்க்கம் நுழைவேன் என்று வேறு எவர் கூறமுடியும்?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு செயலும் எப்படி இறை வணக்கமானது? என்று நீங்கள் நினைக்க வேண்டாம். இது இவ்வாறாகும். அதாவது, அல்லாஹ் அன்னாரைப் பற்றி இவ்வாறு கூறிவிட்டான்: அதாவது, அன்னாருடைய ஒவ்வொரு நிலையும் இறை வணக்கமாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒவ்வோர் அசைவும் எப்படி இறை வணக்கமாக ஆகிவிட்ட?' என்று ஒரு பாமரர் நினைக்கலாம். ஆனால், ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் ஒவ்வொரு செயலும் இறை வணக்கமாகும் என்பது முற்றிலும் சரியான கூற்றாகும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆயினும்! அன்னாரைத் தவிர வேறு எவருடைய ஒவ்வொரு செயலும் இறை வணக்கமாக முடியாது. அன்னார் (ஸல்) ஓர் அழகிய முன்மாதிரியாக இருந்தார்கள். ஏனெனில், அன்னாருடைய ஒவ்வொரு செயலும் அல்லாஹ்வின் திருப்திக்காக இருந்தது. மேலும் எந்தப் பணி இறைத் திருப்திக்காக இருக்குமோ அது இறை வணக்கமாக ஆகிவிடுகின்றது.

அல்லாஹ் அன்னாரைப் பற்றி கூறுகிறான்: لَكُمْ فِيْ رَسُوْلِ اللّٰهِ اُسْوَةٌ حَسَنَةٌ

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் உங்களுக்கு அழகிய முன்மாதிரி இருக்கிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு செயலும் ஒரு முன்மாதிரி என்பதற்கு, அன்னார் (ஸல்) தமது செயல்கள் மூலம் எவை அனுமதிக்கப்பட்டவை? எவை வீணானவை? எவை விரும்பத்தக்கவை? எவை வெறுக்கத்தக்கவை? எவை அனுமதிக்கப்பட்டவை மற்றும் எவை விலக்கப்பட்டவை? என்பதைத் தெளிவுபடுத்தினார்கள் என்பதே அதன் பொருளாகும்.

எனவே, இறைத் தூதரின் ஒவ்வொரு செயலும் ஒரு விளக்கமாக (Description) இருந்தது. உதாரணமாக, அன்னார் (ஸல்)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 09 APR 2026 Issue No. 15

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

தொழுகை நடத்தியது என்பது இறைவனின் ஒரு கட்டளையை நிறைவேற்றுவதலாக மட்டும் இருக்கவில்லை ; மாறாக, இவை கடமைகள் ; இவை சுன்னத், இவை உபரியான வணக்கங்கள் ஆகும் ; மற்றும் இறை நெருக்கத்திற்கு இவை அவசியமாகும் என்பதன் அறிவிப்பதாக இருந்தது.

அன்னார் (ஸல்) உண்ட உணவு இதற்கான அறிவிப்பாக இருந்தது. அதாவது, அன்னார் (ஸல்) எவற்றையெல்லாம் சாப்பிடுகின்றார்களோ? அவை ஹலால் ஆகும். மேலும், அன்னார் (ஸல்) எவற்றை உண்ணவில்லையோ அவை உண்பதற்கு தகுதியற்றவையாகும்.

எனவே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு செயலும் முன்மாதிரியாக ஆக்கப்பட்டிருப்பதால், மக்களுக்கு எவற்றை அன்னார் (ஸல்) அனுமதிக்கப்பட்டவை என்று கூறினார்களோ மேலும் எவற்றைப் பயன்படுத்தினார்களோ அவை இறை வணக்கமாக அமைந்தன. அதேபோன்று, எவற்றைத் தடுத்தார்களோ அல்லது எவற்றைப் பயன்படுத்தவில்லையோ அவற்றை தவிர்ப்பதும் இறை வணக்கத்தில் அடங்கும்.

சுருக்கமாக, அன்னாருடைய ஒவ்வொரு செயலும் இறை வணக்கமாக இருந்தது; ஏனெனில், அவை இறைவனின் கட்டளைக்கு உட்பட்டதாக இருந்தது.

இதற்கு ஓர் உதாரணம்: ஒருவர் அஸர் தொழுகையின் நேரத்தைப் பற்றி விசாரித்தார். ஆரம்ப நேரத்தில் தொழுவது சிறந்தது என்பது வெளிப்படையாகும். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகையைத் தாமதப்படுத்தினார்கள். எந்த அளவிற்கு என்றால், நேரம் மிகக் குறுகியதாக ஆகிவிட்டது. அன்னார் (ஸல்) தொழுகையை அத்தருணத்தில் இவ்வாறு தாமதப்படுத்தியதும் இறை வணக்கமாகவே இருந்தது. ஏனெனில், மனிதன் ஏதேனும் ஒரு காரணத்தினால் ஆரம்ப நேரத்தில் தொழ முடியாவிட்டால், மேலும் கடைசி நேரத்தில் தொழுதுவிட்டால் கூட, அவரது தொழுகை நிறைவேறிவிடும் என்ற பாடத்தை அன்னார் (ஸல்) கற்பித்துக் கொண்டிருந்தார்கள்.

சுருக்கமாக, கடமைகள், சுன்னத்துகள், உபரியான வணக்கங்கள் என அனைத்திலும் இந்த அறிவிப்பு இருந்தது. அதாவது, இவை அனைத்தும் இறை வணக்கமாகும்.

இத்தகைய நிலையிலும் கூட அன்னார் (ஸல்) கூறுகின்றார்கள்:

நான் அல்லாஹ்வின் அருளினால் மட்டுமே சொர்க்கம் செல்வேன்.

அதாவது, அல்லாஹ் அன்னாரைப் பார்த்து, 'உம்முடைய ஒவ்வொரு செயலும் இறை வணக்கமாகும் என்று கூறினாலும், நான் அல்லாஹ்வின் அருளினாலேயே சொர்க்கம் செல்வேன் என்றே அன்னார் (ஸல்) கூறினார்கள். அப்படியிருக்க, மிகக் குறைந்த நற்செயல்களை உடைய நாம், நமது செயல்களைக் கொண்டு சொர்க்கம் செல்வோம் என்று எப்படிச் சொல்ல முடியும்?

இதிலிருந்து அல்லாஹ்வின் அருள் எவ்வளவு அவசியம் ? என்பது தெளிவாகி விட்டது.

அல்லாஹ்வின் அருள் மிக அவசியமானதாகும். ஆனால் அந்த அருள் வெறும் வாதம் செய்வதனால் மட்டும் கிடைத்துவிடாது. அதைப் பெறுவதற்கும் ஒரு விஷயம் தேவைப்படுகின்றது. ஈமான் கொண்டதாக வாதம் புரிவதால் மட்டும் எதுவும் ஆகிவிடாது.

அந்த விஷயம் என்ன? அது 'செயல்' ஆகும் .

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்தைப் பின்பற்றுதலும், அதன் மீது செயல்பட முயற்சிப்பதும் ஆகும். நமது இறை வணக்கத்தின் தரத்தை உயர்த்த முயற்சி செய்வதாகும். அல்லாஹ்வின் அன்பைப் பெற முயல்வதாகும்.

எனவேதான் இறைநேசம் இன்றி இறை வணக்கம் இல்லை; இறைவணக்கம் இன்றி இறை நேசம் இல்லை என்று நான் ஆரம்பத்திலேயே கூறியிருந்தேன். (குத்பாத்தே மஹ்மூத், பாகம் 7, பக்கம் 111-112)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆவின் நிலை என்னவாக இருந்தது?

இதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் தமது விளக்கவுரையில் ஓரிடத்தில் எழுதியுள்ளார்கள். சில இடங்களில் நான் எனது சொந்த வார்த்தைகளிலும் கூறுகிறேன். துஆ செய்பவர்கள் பலர் இருக்கிறார்கள், ஆனால் அவர்களின் நிலை இதுதான்: அவர்களின் கண்கள் ஒருபுறம் இருக்கும், இதயம் ஒருபுறம் இருக்கும்; மூளை ஒருபுறம் இருக்கும். அவர்களின் உள்ளம் துஆவை ஆமோதிக்காது. அவர்கள் துஆ செய்கிறார்கள், ஆனால் கண்கள் எங்கோ இருக்கின்றன. (**இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்**.....) தமிழாக்கம்

முரப்பி

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *

10-ம் பக்கத் தொடர்ச்சி.....

எச்சரிக்கை அவசியமாகும்.

இவை அன்னாருடைய அன்பு மற்றும் இறை வணக்கத்தின் சில அம்சங்களாக இருந்தன. அவற்றை நான் இன்று எடுத்துரைத்துள்ளேன். இந்த ரமலானில் இறை வணக்கத்தின் உண்மையான உரிமையை நிறைவேற்ற அல்லாஹ் நமக்கு நற்பேறு வழங்குவானாக! மேலும் அல்லாஹ் தனது அன்பில் முன்னேறவும் நமக்கு நற்பேறு வழங்குவானாக! அதன் மூலம் இந்த ரமலானின் அருளை நாம் அதிகப்படியாகப் பெற்றுக் கொண்டிருப்போமாக! அதற்குப் பின்னரும் அந்த அருளின் தாக்கங்கள் நம்மிடம் நிலைத்திருக்கட்டுமாக! உண்மையான நம்பிக்கையாளராகவும், ஒரு முஸ்லிமின் அடையாளமாகவும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக!

இந்த நாட்களில் குறிப்பாக சிரமங்களிலும், பொய் வழக்குகளிலும் சிக்கியுள்ள அஹ்மதிகளுக்காக அதிகமாக துஆ செய்யுங்கள். அஹ்மதி சகோதரர்களுக்கு அல்லாஹ் எளிமையை ஏற்படுத்துவானாக! முஸ்லிம் உம்மத்தையும் உங்கள் துஆக்களில் நினைவில் கொள்ளுங்கள். உலகின் அழிவிலிருந்து தப்பிப்பதற்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அப்பாவி மக்களை அவர்களின் தீங்கிலிருந்து காப்பாற்றுவானாக! ஒருவேளை போர் மற்றும் அழிவு விதிக்கப்பட்டிருந்தால், அல்லாஹ் எப்போதும் அப்பாவிகளை அதிலிருந்து பாதுகாப்பானாக. மேலும் அநீதியிழைப்பவர்களைப் பிடிப்பானாக!

(அல்-ஃபஸ்ல் இன்டர்நேஷனல் 13 மார்ச் 2026, பக்கம் 8)

தமிழாக்கம்

முரப்பி

A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *

**National Watch Company**

Sales & Service



B. Mohamed Adil
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad